வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 31.03.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 91 பக்கங்கள் : 16




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



07
உச்சி வெய்யிலிலே வெண்ணெய் விற்க மோடி தமிழகம் வருகிறாரா?



08
வெளிநாட்டு சதி குறித்து வெளியில் சொல்ல ஏன் காத்திருந்தார் சபாநாயகர்?



09
13ஐ வெட்டித் தள்ளும் ரணில் 1000 விகாரைகள் திட்டத்துடன் சஜித்



10
பொதுவேட்பாளர் முன்மொழிவும் தமிழ்த் தலைவர்களின் முரண்பாடுகளும்!

# தமிழரசுக் கட்சியுடனேயே தொடர்ந்தும் பயணிப்பேன்!

## ‘ஸ்பொட்லைட்’ நிகழ்ச்சியில் சுமந்திரன் உறுதி



யாழ்ப்பாணம், மார்ச் 31

**“தமிழரசுக் கட்சியில் இருந்து விலகிச் செல்லும் திட்டம் எதுவும் என்னிடம் இல்லை. இப்போது உள்ளவாறு கொண்ட கொள்கையில் இருந்து விலகாதவாறு தமிழரசுக் கட்சி பயணிக்குமாக இருந்தால் அந்தக் கட்சியிலேயே தொடர்ந்தும் பயணிப்பேன்.”**

**-இவ்வாறு தெரிவித்தார் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன்.**

டான் தொலைக் காட்சியில் பிரதி ஞாயிறு தோறும் இரவு 7 மணிக்கு ஒளிபரப்பாகி வரும் ‘ஸ்பொட்லைட்’ நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழரசுக் கட்சியின் தலைவராக மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவு செய்யப்பட்டால் கட்சியில் இருந்து விலகிச் செல்லும் திட்டம் ஏதும் உண்டா என சுமந்திரன் எம்.பியிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர்-

அப்படி எந்த திட்டமும் என்னிடம் இல்லை. தொடர்ந்தும் தமிழரசுக் கட்சியுடனேயே பயணிப்பேன். கடந்த 15 வருடங்களாக கட்சியின் தலைமைப்

15

## ஜூலைக்குப் பின்னரே தேர்தல்! ஜனாதிபதித் தேர்தலே முதலில்!!

### தனது முடிவை அறிவித்தார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, மார்ச் 31

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பொருளாதார சீர்திருத்தப் பணிகள் ஜூலை இறுதி வரை அமுலில் உள்ளதால் அதற்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கு வாய்ப்பில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவை மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

15

## தமிழக முதல்வரை சந்திப்பதற்கு அமைச்சர் டக்ளஸ்க்கு அழைப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 31

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்திப்பதற்காக தமிழக தரப்பிலிருந்து தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடற்றொழிலாளர்களின் பிரச்னை தொடர்பில்

15

### காணாமற்போனோர் குறித்து

## பொறுப்புக்கூறலை உடனடியாக உறுதி செய்யவேண்டும் இலங்கை

### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 31

இலங்கையைப் பொறுத்தமட்டில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் உடனடியாகப் பொறுப்புக்கூறல் நிலை நாட்டப்படவேண்டும் என்பதுடன், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிசெய்யவேண்டியது அவசியம் என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

“தெற்காசியப் பிராந்தியத்தில் வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களின் தடங்கள்” எனும் தலைப்பில் சர்வதேச மன்னிப்புச் சபையினால்

15

## துமிந்த, லசந்த, மகிந்த ஆகியோரின் பதவிகளை பறித்தது சுதந்திரக் கட்சி!

கொழும்பு, மார்ச் 31

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண மற்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோர் சுதந்திர கட்சியின் முக்கிய பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் அனைத்து தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் நேற்று கட்சித் தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில் செயற்குழுவில் இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க நீக்கப்பட்டு குறித்த பதவிக்கு மகியங்கனை தொகுதி அமைப்பாளர் கே.பி.குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

15

## ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமைக்கு அமெரிக்கா ஆதரவளிக்கவேண்டும்!

### காங்கிரஸ் உறுப்பினர்கள் கோரிக்கை

நியூயோர்க், மார்ச் 31

இலங்கையில் ஜநாவின் உண்மை மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன என தெரிவித்துள்ள அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள், அமெரிக்கா ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி பிளிங்கனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

1. ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து, மற்றும் சர்வதேச சட்டங்களின்படி அவர்களுக்குள்ள உரிமைகளின் அடிப்படையில், பிரச்னையை தீர்ப்பதற்கு,

15

## ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகள் ஆரம்பம்

### தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 31

ஜனாதிபதி தேர்தலுக்காக ஏற்கனவே ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

இதன்படி அந்த தேர்தலுக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வருட இறுதிக்குள் கட்டாயம் ஜனாதிபதித் தேர்தலை

15

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தமிழகத்தில் தஞ்சம்!

மன்னார், மார்ச் 31

மன்னாரில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த, நால்வர் ஏதிலிகளாக தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மன்னார் - திருக்கேதீஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தஞ்சமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனுஷ்கோடி மணல் திட்டில் தரையிறங்கிய குறித்த நால்வரும், இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மண்டபம் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி மற்றும் சமூகத்தில் அதிகரித்த போதைப்பொருட்களின் பயன்பாடு என்பவற்றிலிருந்து, தமது

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

வெடுக்குநாறி மாலை ஆதி சிவன் ஆலயத்தில் மகாசிவராத் திரி பூசை வழிபாடுகளைச் செய்வ தற்காக சென்றிருந்த ஆலய பூசகர், மற்றும் பக்தர்கள் மீது பொலிசார் அடாவடித்தனம் நடத்தியமை பழைய செய்திதான். எமது வாச கர்களுக்கு அது பழைய செய்தி தான் என்றாலும், அதுபற்றி இப்போது எழுதுவதற்கு என்ன இருக்கிறது என்று நீங்கள் கேட் கலாம்.

உண்மைதான், அதுபற்றி நீண்ட நாட்களுக்கு பின்னர் எழுத ஆரம் பிக்கின்றபோது உங்கள் மனதில் இவ்வாறு கேள்வி எழுவது தவிர்க்கமுடியாதுதான். ஆனால், இப்போது அதாவது இருபது நாட் களுக்கு பின்னர் தான் நமது 'இமா லய பிரகடனக்காரர்கள்' அது பற்றி வாய்திறந்திருக்கின்றனர்.

இந்த நாட்டில் இனங்களுக்கி டையே எப்போதும் முறுகல் நிலை நீடிப்பதற்கு முக்கிய கார ணம் இந்த பௌத்த துறவிகள் தான் என்பது விவாதத்திற்கு உரிய தல்ல. ஆனால், அவர்களோடு சேர்ந்து இலங்கையில் இனங்க ளுக்கிடையே - மதங்களுக்கி டையே நல்லிணக்கத்தை ஏற் படுத்துவதற்கு நமது உலகத் தமி ழர் பேரவை முன்வந்தபோது, ஆரம்பத்திலேயே அதனை கேள் விக்கு உள்ளாக்கியிருந்தோம். அது வேறு எதற்காகவும் அல்ல, அப்படியொரு நல்ல முயற்சியை செய்கின்றபோது எதற்காக வெளிப்படைத்தன்மை இல்லா மல் இரகசியமாக ஒருசிலர் மாத்தி ரம் இந்த முயற்சியை செய்தீர்கள் என்பதே எமது பிரதானமான கேள்வியாக அப்போது இருந்தது.

ஆனால், அதுபற்றி பகிரங் கப்படுத்தினால், ஆரம்பத்தி லேயே சிலர் அதனை கெடுத்து விடுவார்கள் - அதாவது முளை யிலேயே கிள்ளிவிடுவார்கள் என்று விளக்கம் அளிக்கப்பட்டது.

அவர்களின் இமாலய பிரகட னத்தில் எதுவும் குறிப்பிடப்பட் டாவிட்டாலும், போர்க்குற்றம் குறித்த விசாரணை பற்றியும், பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி பற்றியும் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யப்போவதாக கூறப்பட்டது.

இப்போது அதனை முன்னெ டுப்பதற்காக மாவட்டம்தோறும் பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற் காக கருத்தரங்குகள் நடத்தப் பட்டு வருவதாக கூறப்படுகின் றது. நல்லதுதான்.

பெரிய ஆரவாரங்களுடனும் நாடுதளுவிய பிரசாரங்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டம் இப்போது மிக மெதுவாக என் றாலும் நகர்ந்து கொண்டிருக் கின்றது. அதுவல்ல, எமக்கு இன்று எழுகின்ற கேள்வி,

வெடுக்குநாறி மலையில் சிவ ராத்திரி விரதத்தை அனுஷ்டிப் பதற்காக சென்ற பூசகர், மற்றும் பக்தர்கள் கைதுசெய்யப்பட்டு, அவர்கள் மீது பொலிசார் அடாவ டித்தனங்களை செய்ததைத் தொடர்ந்து வவுனியா பகுதி, குறிப்பாக நெடுங்கேணி ஒரு போராட்டக் களமாக மாறியிருந் தது. தொடர்ச்சியாக அங்கு மக்கள் ஆயிரக்கணக்கில் கூடி, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்தனர். அப்போதெல்லாம் அமைதியாக இருந்த இந்த இமா லய பிரகடன குழுவினர் - குறிப் பாக இதில் உள்ள பௌத்த துறவி கள், இருபது நாட்கள் கழித்து அறிக்கை வெளியிடுவதற்கு ஏதேனும் விசேட காரணங்கள் இருக்குமோ தெரியவில்லை.

சம்பவம் நடைபெற்ற உட னேயே, அரசின் முக்கிய அமைச்ச ரான டக்ளஸ் தேவானந்தா, பொலிசார் அடாவடித்தனத்தில் ஈடுபட்டதாக பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார். ஆனால் அப் படி பொலிசார் அடாவடித்தனத் தில் ஈடுபட்டபோதிலும், அந்த விவகாரம் குறித்து நீண்டநாட்க ளாக இமாலய பிரகடன காரர்கள் அமைதியாக இருந்தமை ஏன் என்பதும் பலருக்கும் கேள்வியாக மனதில் இருக்கலாம். பௌத்த துறவிகளுடன் இணைந்துதான் இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று நம்புப வர்கள் பலர். ஆனால், அவ்வாறு உலகத்தமிழர் பேரவையுடன் இணைந்த பௌத்த துறவிகள் பற்றி பல்வேறு கேள்விகள் இருந் தன. பலரும் அவர்கள் பற்றிய நம்பகத்தன்மையை வெளிப் படுத்தியிருந்தனர்.

அந்த நம்பிக்கையீனத்தை உறுதிசெய்வதாகவே இப்போது அவர்களின் அறிக்கை வெளிவந்தி ருக்கின்றது. நொந்துபோயிருக்கும் தமிழ் மக்களுக்கு அவர்கள் மயிலிற கால் எண்ணை தடவுவதுபோல் தடவ முற்பட்டிருப்பதையே அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

இருந்தாலும், அவர்கள் எதையோ செய்ய முன்வருகிறார் கள். செய்வதற்கு விட்டால்தானே செய்வார்கள் என்று அப்போது சில நண்பர்கள் ஆலோசனை வழங்கினார்கள். சரி இன்னும் காலம் இருக்கிறதுதானே. பொறுத்திருந்து பார்ப்போம்.

இவ்வாறு காலம்தாழ்த்தி அறிக்கை வெளியிட்டதற்கு பதி லாக மக்கள் வீதிகளில் நின்ற போது அவர்களும் வந்து நின்றி ருந்தால், இன்னும் நமக்கு நம் பிக்கை அதிகரித்திருக்கும்.

நேற்று டான் ரிவி அலுவலகத் திற்கு வந்திருந்த தமிழ் அரசு கட்சி யின் யாழ்ப்பாண மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் ம.அ.சுமந்தி ரனை தற்செயலாக சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

'ஐந்தாம் திகதி என்ன நடக் கும்?" என்று அவரிடம் கேட் டேன்.

அதாவது எதிர்வரும் ஐந்தாம் திகதி திருகோணமலை நீதிமன்றத் தில் தமிழ் அரசு கட்சி தொடர் பான வழக்கு அழைக்கப்படவிருக் கின்றது. அதனையே அவரிடம் கேட்டிருந்தேன்.

அவர் சிரித்துக்கொண்டே சொன்னார், 'அங்கே கட்சிக் காரர்கள் எல்லோரும் ஒன்றாக நிற்போம்" என்று,

அவர் கட்சிக்காரர் என்று கூறியமை, வழக்கில் எதிராளிகள் என்று பெயர்குறிப்பிடப்பட்ட கட்சிக்காரர்களை மட்டும்தானா அல்லது, வழக்கை தாக்கல்செய்த கட்சிக்காரர்களையும் சேர்த்தா என்பது தெரியவில்லை.

ஆனால், அவர் எதிராளிகளாக பெயர் குறிப்பிடப்பட்டவர்களை மட்டும்தான் சொன்னார் என்றா லும் கூட, எல்லோரும் ஒற்றுமை யாக இருந்து அந்த வழக்கை முடித்துவைக்கவேண்டும் என் பதுதான் ஒட்டுமொத்த தமிழர் களின் விருப்பமும்!.

**- ஊர்க்குருவி.**

# இந்திய - இலங்கை இரு தரப்பு திட்டங்கள் குறித்து மீளாய்வு

கொழும்பு, மார்ச் 31

இந்திய - இலங்கை இடை யிலான இருதரப்புப் பொரு ளாதார திட்டங்களின் முன் னேற்றத்தை மீளாய்வு செய்வ தற்கான சந்திப்பொன்று நேற்று முன் தினம் புதுடில்லி யில் நடைபெற்றது.

இந்திய வெளியுறவுச் செயலர் வினய் குவாத்ராவின் அழைப்பின் பேரில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட இலங்கையின் உயர்மட்டக் குழுவின் பங்கேற்புடன் இந் தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது சாகல ரத் நாயக்க உள்ளிட்ட குழுவின ருக்கு இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிறப்பு வரவேற் பளித்ததுடன், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி சாதக மான நிலைக்குத் திரும்பி வருவதால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் மூலோபாய பொருளாதார வேலைத் திட்டத்தின் கீழ் இணக்கம் காணப்பட்ட திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தும் இயலுமை இரு நாடுகளுக்கும் உள்ளதென வும் தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையின் பொருளாதா ரத்தை மீட்டெடுக்க இந்திய அரசாங்கம் வழங்கிய ஆதர விற்கு நன்றி கூறிய சாகல ரத்நாயக்க, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தில் இலங்கையின் முன்னேற்றம் குறித்து விளக்க மளித்தார்.

இலங்கையின் பொருளா தாரத்தைப் பலப்படுத்த, துரித முன்னேற்றம் அடைய வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய சாகல ரத் நாயக்க, அதற்காக இந்தியா வுடன் தற்போதுள்ள பொரு ளாதார ஒத்துழைப்பையும் பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியு றுத்தினார்.

இதன்போது இந்திய - இலங்கை வரலாற்றுத் தொடர் புகளை நினைவு கூர்ந்த சாகல ரத்நாயக்க, இலங்கையின் அயல் நாடான இந்தியாவு டனான வலுவான தொடர்பு களை ஏற்படுத்தி வருவதாக வும் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில், இலங்கைக்கும் இந்தியாவுக் கும் இடையிலான இருதரப்பு திட்டங்களை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத் துவது குறித்து இருதரப்பும் கவனம் செலுத்தியதுடன், ஒவ்வொரு காலாண்டிலும் அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யவும் தீர்மா னிக்கப்பட்டது. (அ)

# 'யாழ் ஆரோக்கிய பவனி' தூய்மையாக்கல் பணி

யாழ்ப்பாணம், மார்ச் 31

அனைத்துலக சுழியக் கழிவு தினமான நேற்று யாழ். நகரில் 'யாழ் ஆரோக்கிய பவனி' தூய்மையாக்கல் பணியும், விழிப்புணர்வுச் செயற்பாடும் இடம்பெற்றது.

இந்தியத் துணைத் தூத ரகம், யாழ். மாநகரசபை, யாழ்.பிரதேச செயலகம், தொல்லியல் திணைக்களம் மற்றும் யாழ்.பொலிஸார் ஆகியோரின் பங்கேற்பில் சிகரம் நிறுவனத்தின் படலை வடமாகாண சுற்றுலா சேவைப் பிரிவினரின் ஒழுங்குபடுத்தலில், யாழ். மாநகர பகுதியில் தூய நகரை உருவாக்குவதை இலக்காகக் கொண்ட குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.





இந்தத் திட்டத்தின்கீழ், யாழ்.நகரின் பிரதான வீதிகள் சிலவற்றின் ஊடாகவும், யாழ்ப்பாணத்தின் சுற்றுலா ஈர்ப்பு வலயமாக காணப் படும் மணிக்கூட்டுக் கோபு ரம் முதல் பண்ணை சுற்று வட்டம் வரையிலான பகுதியிலும் தூய்மைக்கால் பணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ் ஆரியகுளம் சந்திப் பகுதியில் காலை 7 மணியள வில் ஆரம்பித்த இந்தப் பணி, 3 வீதிகளூடாக யாழ் பண்ணைப் பகுதி வரையில் மேற்கொள்ளப்பட்டது.

பண்ணை நடைபாதை, யாழ் கோட்டை உள்ளிட்ட சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் பகுதிகளை நிரந்தரமாக தூய்மையாகப் பேணும் வழிவகைகள் குறித்த கலந்துரையாடலும் நடை பெற்றது.

இந்த நிகழ்வில், இந்தியத் துணைத் தூதுவர், வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ் மாநகர ஆணையாளர், மாநகரசபையின் உயரதி காரிகள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் யாழ் வணிகர் கழக பிரதிநிதிகள், தன்னார்வலர்கள், பொலி ஸார் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# மகனின் தாக்குதலில் தந்தை பலி!

கொழும்பு, மார்ச் 31

கலவுட கொடுன்ன பகுதி யில் நேற்று அதிகாலை தந் தைக்கும் மகனுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் பின் னர் கைக்கலப்பாக மாறியதில் மகனின் தாக்குதலில் தந்தை பலியான தாக கலவுட பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர் பில் 28 வயதுடைய மகன் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹபத்கமுவ, கொடுன்ன, ஹாலிஎல பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு மகனின் தாக்குதலில் உயிரிழந்துள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் வீட்டில் தந் தைக்கும் மகனுக்கும் இடை யில் ஏற்பட்ட வாக்குவாதம் பின்னர் கைக்கலப்பில் மாறி யதில் குறித்த நபர் உயிரி ழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந் துள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் பி. எம். ஜயரத்ன, கலவுட பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி பொலிஸ் பரிசோத கர் ஆர்.ஏ.டி.கே யல்கும்புர ஆகியோரின் ஆலோசனை யின் பேரில் கலவுட பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருவதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

# வடமாகாண மக்களை இனி ஏமாற்றமுடியாது!

## கூறுகிறார் சந்திம வீரக்கொடி

**கொழும்பு, மார்ச் 31**
**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தென் மாகாணமக்களை போன்று வடக்கு மாகாண மக்களை இனிவரும் காலங்களில் ஏமாற்றமுடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.**




அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தாமே ஜனாதிபதி வேட்பா ளர் என வலுக்கட்டாயமாக ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்த ரணில் விக்கிரமசிங்க இன்று கூறுகின்றார்.

ஆனால் பொதுஜன பெர முன ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக இது வரை தெரிவு செய்யவில்லை. தென்பகுதிமக்களையும் வடப குதி மக்களையும் ஏமாற்றிய வரலாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு. எனவே வடக்கு மக்களை இனி யும் அவரால் ஏமாற்ற முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் வெறும் ஒன்றரை லட்சம் வாக் குகளை மாத்திரமே பெறமுடி யும்.எனவே இவை அனைத்தும் ஏமாற்றுச் செயற்பாடாகும். மக்களின் நிராகரிப்புக்குள்ளான இவர்களின் அரசியல் பயணத் திற்கு மக்கள் முற்றுப்புள்ளி வைத்துள்ளனர்-என்றார். (அ)

# ராஜபக்ஷ தரப்பினர் மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள் அல்லர்!

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, மார்ச் 31
பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாள ராக ரணில் விக்ரமசிங்கவே முன் னிலையாவார் என ஐக்கிய மக் கள் சக்தியின் முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ராஜபக்ஷ தரப்பினர் இந்த நாட்டின் மீதோ மக்கள் மீதோ அக்கறை கொண்டவர்கள் அல் லர். மாறாக அவர்கள் தங்களின் அரசியல் தேவைகளுக்காகவே செயற்படுகின்றனர்.

மஹிந்த ஆட்சிக் காலத்தில் இழைக்கப்பட்ட தவறுகளை நாட்டு மக்கள் நன்கு அறிவர் எனவே நாமல் ராஜபக்ஷ எந்த வொரு வேடம் தரித்து வந்தா லும் மக்களுக்கு ராஜபக்ஷ தரப் பினர் மீது நம்பிக்கை ஏற்படாது. திருகோணமலையில் ஒழிந்தி ருந்த ராஜபக்ஷ தரப்பினர் ரணில் விக்கிரமசிங்கவின் புண் ணியத்தால் வெளி உலகுக்கு வந்தனர்.

இன்று நாமல் குடும்ப அரசி யல் தேவைக்காக அடித்தளமிட் டுள்ளார்.ஆனாலும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட் பாளராக நாமல் செயற்பட முடி யாது. ஏனென்றால் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதித் தேர் தல் வேட்பாளராக ரணில் விக் கிரமசிங்கவே முன்னிலையா வார். ரணில் ராஜபக்ஷ தரப்பி னரின் அரசியல் நாடகங்களை மக்கள் நன்கு அறிவர்-என்றார்.

# சர்வதேசத்துடன் செயல்படக்கூடிய ஒருவரே ஜனாதிபதியாகவேண்டும்!

## நீதியமைச்சர் விஜயதாச கருத்து

கொழும்பு, மார்ச் 31
"நாடு தொடர்பில் சரியான தீர்மானம் எடுக்கக்கூடிய சிறந்த அரசியல் அனுபவம் கொண்ட சர்வதேச நாடுகளுடன்இணைந்து செயற்படக்கூடிய ஒருவரே ஜனாதிபதியாக தெரிவுசெய்யப் படவேண்டும்" என நீதியமைச் சர் விஜயதாச ராஜபக்ஷ தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

மக்கள் ஆணையுடனேயே ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டும். நாடு தொடர்பில் சரியான தீர்மானம் எடுக்கக் கூடிய சிறந்த அரசியல் அனுப வம் கொண்ட சர்வதேச நாடுக



ளுடன் இணைந்து செயற்படக் கூடிய ஒருவரே இந்த நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய் யப்படவேண்டும்.

இந்த நாட்டு மக்களின் அமோக ஆதரவுடனேயே ஜனா திபதி தெரிவு செய்யப்பட வேண்டும்.ஜனாதிபதி வேட்பா ளர்தொடர்பாக எமது தனிப் பட்ட தீர்மானத்தினால் எதனை யும் செய்யமுடியாது. மக்கள் அதனை தீர்மானிப்பர்-என்றார்.

# போதைப்பொருள்கள், பாதாள குழுக்களை முற்றாக ஒழிக்கும் வரை யுக்திய தொடரும்!

கொழும்பு, மார்ச் 31
நாட்டில் போதைப்பொருள் மோசடி மற்றும் பாதாளக் குழு செயற்பாடு முற்றாக ஒழிக்கப் பட்டுள்ளதாக மக்களுக்கு நம் பிக்கை ஏற்படும் வரை யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்ப டும் என பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

காலிக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்த அவர் ஊடகங்களை சந்தித்துக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

இந்த நாட்டில் போதைப் பொருள்மோசடி மற்றும்பாதாள குழு செயற்பாடு முற்றாக ஒழிக் கப்பட்டுவிட்டதாக மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வரை யுக் திய சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்ப டும்.

ஒவ்வொரு நாளும் நாடளா விய ரீதியில் முன்னெடுக்கப்ப டுகின்ற சுற்றிவளைப்பு நடவ டிக்கை தொடர்பில் அதிக கவ னம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டுமக்கள் பாதாள குழு செயற்பாடுகள் போதைப்பொ ருள் விற்பனை தொடர்பில் பெரி தும் அச்சம் அடைந்துள்ளனர். எதிர்வரும் ஒரு மாத காலத்திற் குள் நல்லதொரு மாற்றத்தை ஏற் படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

இதேவேளை, 11 கோடி ரூபா வுக்கும் அதிக பெறுமதியுடைய தடை செய்யப்பட்ட வாகனங் கள் உள்ளிட்ட சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ள தாக பொதுபாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசா ரணைப் பிரிவினரால் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்படி லொறி, வான் உட்பட 2 முச்சக்கரவண்டிகள், 9 மோட்டார் சைக்கிள்கள், 3 மீன்பிடிப் படகுகள் மற்றும் 5 கோடி ரூபாவுக்கும் அதிக பெறு மதியுடைய காணி மற்றும் வீடு, வர்த்தக நிலையங்கள் என்பன இவற்றுள் உள்ளடங்குவதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது- என்றார். (அ)

# கொழும்பு வந்த குயின் விக்டோரியா

கொழும்பு, மார்ச் 31
குயின் விக்டோரியா சொகுசு கப்பல் கொழும்பு துறைமு கத்தை வந்தடைந்துள்ளது.

சிங்கப்பூரில் இருந்து நேற் றுக் காலை கொழும்பு துறை முகத்தை வந்தடைந்ததாக தெரி விக்கப்பட்டது.

பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆயி ரத்து 812 பயணிகளும் 964 பணியாளர்களும் குறித்த கப்பலில் வருகை தந்துள்ளனர்.

நாட்டுக்கு வருகைதந்துள்ள குறித்த சுற்றுலா பயணிகள் காலி, கண்டி, பின்னவல ஆகிய இடங்களுக்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# 1000 ரூபாய்க்கு கோழி இறைச்சி

கொழும்பு, மார்ச் 31
பண்டிகைக்காலத்தில் தட் டுப்பாடின்றி கோழி இறைச்சி மற்றும் முட்டைகளை இறக்கு மதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை கால்நடை உற்பத்தி யாளர்கள் சங்கம் தெரிவித்துள் ளது.

இதன்படி பண்டிகைக் காலத்தில் ஆயிரம் ரூபாவுக்கு கோழி இறைச்சியை விற்பனை செய்யமுடியும் என அகில இலங்கை கால்நடை உற்பத்தி யாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

இதனிடையே இந்தியாவில் இருந்து முட்டை இறக்கும தியை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக அரச வர்த்தக கூட்டுத்தபா னம் அறிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட சுமார் சுமார் 4 மில்லியன் முட் டைகள் பண்டிகைக் காலத்தில் உள்ளூர் சந்தைகளுக்கு வழங் கப் படவுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தபானத்தின் தலைவர் ஆசிறி வலிசுந்தர தெரிவித்தார். (அ)

# கட்சிப் பதவிநிலைகளில் இருந்து நீக்கியமைக்கு எதிராக நடவடிக்கை

## அஹிந்த அமரவீர கடும் விசனம்

கொழும்பு, மார்ச் 31
சுதந்திரக் கட்சியின் பதவிநி லைகளில் இருந்து நீக்கியமைக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளதாக அமைச் சர் மஹிந்த அமரவீர தெரிவித் துள்ளார்

சுதந்திரக்கட்சியின் மத்திய குழுகூட்டம் நேற்று இடம் பெற்ற நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க, ராஜாங்க அமைச்சர் லசந்த அழ கியவண்ண மற்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோரை கட்சியின் பதவிநிலைகளில் இருந்து நீக்குவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து துமிந்த திசாநாயக்க நீக்கப்பட் டுள்ளதுடன் பொருளாளர் பத வியில் இருந்து லசந்த அழகிய வண்ண நீக்கப்பட்டார்.

அத்துடன் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பதவியில் இருந்து மஹிந்த அமரவீர நீக்கப்பட்டுள் ளார்.

இந்த நிலையிலேயே கட்சி யின் தீர்மானத்திற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வுள்ளதாக அவர் அறிவித்துள் ளார். (அ)

# கிளிநொச்சி சந்தையில் தண்ணீர் வசதி இல்லை!

## துன்பப்படும் வணிகர்கள்

கிளிநொச்சி, மார்ச் 31

**கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட கிளிநொச்சி சேவைச் சந்தையில் நீண்ட காலமாக தண்ணீர் வசதிகள் சீராக கிடைக்கப் பெறாமையின் காரணமாக வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.**

**குறித்த சந்தையில் நீண்ட நாட்களாக தண்ணீர் வசதியின்மை காரணமாக பெரிதளவில் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தம்மிடம் வருகை தரும் நுகர்வோரின் எண்ணிக்கையும் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.**

கிளிநொச்சி சந்தைப் பகுதியில் உள்ள பொது மலசல கூடம் தூய்மையின்றி காணப்படுவதாகவும், இது தொடர்பாக பல தடவைகள் கரைச்சி பிரதேச சபைக்கு தெரிவித்தும் இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை எனவும் சந்தை வளாக வடிகால்களும் நீண்ட நாட்களாக துப்பரவு செய்யப்படாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பெரிதளவில் சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் நோய்வாய்பட அதிக சாத்தியங்கள் உள்தாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

உடனடியாக விரைந்து தமக்கான தண்ணீர் வசதியையும், துப்பரவுப் பணியையும் மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி



பொதுச்சந்தை வர்த்தகர்கள் கோரியுள்ளனர்.

அத்துடன், சந்தைப் பகுதிக்குள் அமைந்துள்ள மலசலகூடம் மற்றும் மீன் விற்பனை செய்யப்படும் பகுதிகளுக்கு உட்செல்ல முடியாதவாறு துர் நாற்றம் விசுவதாகவும், தண்ணீரின்மையால் பெரிதும் சிரமப்படுவதாகும் வர்த்தகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(அ)



# ஷங்காய் மாநாகர முதல்வரை சந்தித்தார் பிரதமர் தினேஸ்!

## பழைய ஒப்பந்தத்தை தொடர இணக்கம்

*பீஜிங், மார்ச் 31*

கொழும்புக்கும் சீனாவின் ஷங்காய் நகரத்துக்கும் இடையிலான சகோதர நகர உடன்படிக்கை ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் அதனூடாக புதிய தொடர்புகளை ஏற்படுத்தி கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று முன் தினம் சீனாவின் ஷங்காய் மாநாகர முதல்வரை சந்தித்து நீண்டதொரு கலந்துரையாடலை மேற்கொண்டார்.

உலகின் துறைமுக நகரங்களில் சீனாவின் ஷாங்காய் நகரம் முதலிடம் வகிக்கின்றது. எனவே எதிர்காலத்தில் சீனாவின் ஷங்காய் நகருக்கும் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய நகரங்களுக்கும் இடையே வலுவான தொடர்பை ஏற்படுத்த இதன் போது இணக்கம் காணப்பட்டது.

கொழும்புக்கும் ஷங்காய் நகரத்துக்கும் இடையிலான சகோதர நகர உடன்படிக்கை ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதனுடாக பாரிய பணிகளை மேற்கொள்ள முடியும் எனவும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

ஷங்காய் நகரம் கப்பல் போக்குவரத்தின் ஊடாக 49.5 மில்லியன் யுவான் நிதியை பெற்று முதலிடத்திலுள்ளது. இதிலிருந்து இலங்கை கற்கக்கூடிய பாடங்கள் ஏராளம் என்றும் கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

4.72 டிரில்லியன் யுவான் வருடாந்த உற்பத்தி வருமானம் கொண்ட ஷாங்காய் நகரம், உலகத் தரம் வாய்ந்த வர்த்தக மையமாகவும், நிதி பரிவர்த்தனை களுக்கான மையமாகவும் விளங்குவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

(அ)




# வவுனியாவில் நேற்று போராட்டம்

*வவுனியா, மார்ச் 31*

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர் வவுனியாவில் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் சர்வதேச விசாரணையின் அவசியம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து பதாதைகளை தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குற்றமிழைத்தவ்ரகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கப்படவேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர். (அ)

# கொழும்பிலிருந்து கல்முனை சென்ற சொகுசு பஸ் விபத்து!

*மட்டக்களப்பு, மார்ச் 31*

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி 4 ஆம் கட்டை பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் பலர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து கல்முனை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த சொகுசு பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் 4 ஆம் கட்டை பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியை விட்டு விலகி பஸ் விபத்திற்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் சாரதி உட்பட பலர் பலத்த காயமடைந்த நிலையில், சிகிச்சைகளுக்காக காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

சாரதியின் தூக்கக் கலக்கமே விபத்திற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மயிலிட்டியில் தரித்து நிற்கும் இழுவை படகுகளை அகற்றுக!

## அமைச்சர் டக்ளசிடம் கோரிக்கை

*யாழ்ப்பாணம், மார்ச் 31*

மயிலிட்டி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இழுவைப் படகுகளால் துறைமுகத்தில் கடற்றொழிலாளர்கள் படகுகளை கரை சேர்ப்பது மற்றும் எரிபொருள் நிரப்புவது போன்ற செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அதற்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மயிலிட்டி துறைமுக பகுதிக்கு நேற்று சனிக்கிழமை களவிஜயம் மேற்கொண்ட அமைச்சர்டக்ளஸ் தேவானந்தா, கடற்தொழிலாளர்களிடம் நிலைமைகளை கேட்டறிந்து கொண்டார்.

அதன்போது. மயிலிட்டி இறங்குதுறைப் பகுதியில் அதிகளவான நீண்டநாள் தொழில் மேற்கொள்ளும் மீன்பிடிப் படகுகள் தரித்து நிற்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அந்தப் படகுகளால் நாளாந்தம் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படகுகள் எரிபொருள் நிரப்புவதிலும் படகுகளை கரை சேர்ப்பதிலும் பல அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றன.

இவ்வாறான பிரச்னைகள் தொடர்ந்து வருவதால் அவற்றை ஒழுங்குபடுத்தி கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு இறங்குதுறையின் செயற்பாடுகளை இலகுபடுத்தி தருமாறு



கடற்றொழிலாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் மயிலிட்டி துறைமுகத்தில் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்திய இழுவைப் படகுகளாலும் துறைமுகத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

நிலைமைகளை அவதானித்த அமைச்சர், அவ்வாறு தரித்து நிறுத்தப்பட்ட படகுகளை ஆழமான பகுதியில் நிறுத்தி வைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் குறிப்பாக தொழில் மற்றும் எரிபொருள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வருகை தரும் படகுகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாத வகையில் பொறிமுறையை வகுத்து தீர்வுகளை காணுமாறும் துறைசார் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

இதேவேளை, தடை செய்யப்பட்ட சுருக்குவலை தொழில் நடவடிக்கைகளும் இப்பகுதியில் அதிகரித்து வருவதாகவும் அவற்றையும் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அமைச்சரிடம் கடற்றொழிலாளர்கள் கோரியிருந்தனர்.

இவ்விடயம் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்திய அமைச்சர், அவ்வாறான தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கக்கூடாதெனவும் அவ்வாறு செயற்படும் தரப்பினரை தடுப்பதுடன் அவர்களைச் சட்டத்தின் முன்நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் உரிய தரப்பினருக்கு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Eelanadu
31.03.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் மக்களுக்காக என்ன செய்வீர்கள்?

தமிழ் மக்களின் வாக்குகள் ரணில் விக்கிரமசிங்கவிற்கே கிடைக்குமென்று, ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தமிழ் விவகாரங்களை கையாளும் ரவி கருணாநாயக்க தெரிவித்திருக்கின்றார். 2005இல், தமிழ் மக்கள் விட்ட வரலாற்று தவறை, இம்முறை செய்யமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். சில தினங்களுக்கு முன்னர், தமிழ் மக்கள் தன்னைத்தான் ஆதரிப்பார்கள் என்று, சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்தார். கடந்த காலத்தில் தமிழ் மக்கள் வாக்களித்ததை முன்வைத்தே, ஒவ்வொருவரும் தமிழ் மக்களின் மனோநிலையை மதிப்பிடுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல்களின் போது, தமிழ் மக்கள் பொதுவாகவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பது வழக்கம்தான். இதற்கு தமிழ் மக்களை வழிநடத்திய தமிழ் தேசிய கட்சிகளே காரணமாகும். இலங்கை தமிழரசு கட்சியும் சரி, பின்னர் உருவாகிய தமிழர் விடுதலைக் கூட்டணியும் சரி - ஐக்கிய தேசியக் கட்சியியுடன், இணக்கப்பாட்டிற்கு சென்றிருப்பதே வரலாறு. அதேபோன்று, தமிழ் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு முயற்சிகள் அனைத்துமே ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்திலேயே முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. பண்டா - செல்வா உடன்பாட்டுக்கான முயற்சி மட்டுமே இதற்கு விதிவிலக்கு.

தேசிய இனப்பிரச்னையை தீர்க்கும் நோக்கில் இடம்பெற்ற இரண்டு வரலாற்று, பேச்சுவார்த்தைகளான, இந்திய - இலங்கை ஒப்பந்தம் மற்றும் ஒஸ்லோ பேச்சுவார்த்தை ஆகிய இரண்டும், ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்திலேயே இடம்பெற்றன. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தமிழ் தலைமைகள் காலத்திற்கு காலம் ஐக்கிய தேசியக் கட்சியின் மீது, நம்பிக்கை வைத்து, தீர்வுகளை காண முற்பட்ட வரலாறுண்டு.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், ஜனாதிபதி தேர்தல்களின் போது, தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து வந்திருக்கின்றனர். இந்த விடயங்களை துல்லியமாக மதிப்பிட்டதன் விளைவாகவே, விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமை 2005 ஜனாதிபதி தேர்தலின் போது, தேர்தல் பகிஷ்கரிப்பின் மூலம், ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்கும் வியூகத்தில் வெற்றிபெற்றது. தமிழ் மக்கள் வாக்களிப்பில் பங்குகொண்டிருந்தால் நிச்சயம் ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரித்திருப்பர்.

தற்போதுள்ள சூழலில், ரணில் மற்றும் சஜித் ஆகிய இருவருமே, தமிழ் மக்களின் வாக்குகள் மீது, அளவுகடந்த நம்பிக்கை வைத்திருக்கின்றனர். ஆனால், இருவருமே, தமிழ் மக்களின் பிரச்னையை தீர்ப்பதற்காக தாங்கள் என்ன செய்வார்கள் என்று இதுவரையில் கூறவில்லை. இந்த இடம்தான் தமிழ் மக்கள் உற்றுநோக்க வேண்டிய இடம் - இந்த இடத்தைத்தான் தமிழ் கட்சிகள் உற்று நோக்கவேண்டும்.

ஈழநாடு தொடர்ந்தும் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டிவருகின்றது. சாதாரணமாக தமிழ் மக்களின் வாக்குகளை பெறலாம் என்னும் தென்னிலங்கை மனோபாவத்திற்கு முற்றுப்புள்ளியிட வேண்டும். உதாரணமாக முஸ்லிம் மற்றும் மலையக கட்சிகள் கூட, ஜனாதிபதி வேட்பாளரை, ஆதரிக்கும் போது வெறும் வார்த்தைகளை நம்பி ஆதரிப்பதில்லை. மாறாக, அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புகளுக்கான உடன்பாட்டின் அடிப்படையில்தான் ஆதரிக்கின்றனர். அவர்களை பொறுத்தவரையில் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கு அது சரியானது - ஆனால், ஈழத் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னை முற்றிலும் வேறுபட்டது.

அந்தப் பிரச்னைகளுக்கான தீர்வு தொடர்பில் வெளிப்படையான அறிவிப்புக்கள் இன்றி, தமிழ் மக்கள் தென்னிலங்கை வேட்பாளர்களை ஆதரிக்க முடியாது - தமிழ் மக்களின் வாக்குகளை கோரும் அனைவரும், தாங்கள் தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்காக என்ன செய்வார்கள் என்பதை பொது வெளிகளில் ஒரு கொள்கைப் பிரகடனமாக முன்வைக்க வேண்டும். அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட வேண்டும்.

## அவுஸ்திரேலியா இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஆதரவில் யாழ்., முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு உதவி

*யாழ்ப்பாணம், மார்ச் 31*



அவுஸ்திரேலியாவிலிருந்து கடந்த 36 வருடங்களுக்கும் மேலாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் அனுசரணையில் அண்மையில் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வதியும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையில் 2024 ஆம் ஆண்டிற்கான முதல் மூன்று மாத கால நிதியுதவி வழங்கப்பட்டது.

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் யாழ் - முல்லை, கிளிநொச்சி மாணவர் தொடர்பாளர் அமைப்பான சிறுவர் அபிவிருத்தி நிலையப் பணியாளர்கள் இந்நிகழ்ச்சியை ஒழுங்கமைத்திருந்தனர்.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் திட்ட அமுலாக்கத்துடனும் அவுஸ். இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் நிதிப்பங்களிப்புடனும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாணவர்களின் கல்விக்கான முதலாம் காலாண்டு கொடுப்பனவு இம்முறை ஒரு மாணவருக்கு மாதாந்தம் தலா நான்காயிரம் ரூபா வீதம் பன்னிரண்டாயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இலங்கையில் தோன்றியிருக்கும் பொருளாதார நெருக்கடியை கவனத்தில்கொண்டு, 2024 ஆம் ஆண்டு முதல் மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இம்மாணவர்கள் மாதாந்தம் மூவாயிரம் ரூபாவை பெற்று வந்தனர்.

அவுஸ்திரேலியாவில் வதியும் தமிழ் அன்பர்களின் நிதிப்பங்களிப்புடன் மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாக இயங்கி வரும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்துடன் தொடர்பாடல்களை மேற்கொண்டு, போரிலும் வறுமையிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களை வடக்கில் தெரிவுசெய்து இந்த நிதிப்பங்களிப்பினை வழங்கி வருகிறது.

“ யாழ். சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்திற்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்திற்குமான நட்புறவு பல வருடங்களுக்கும் மேல் தொடர்ந்து செல்கின்றது. அதற்கான காரணம் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாம் கைகொடுத்து உதவவேண்டும் என்ற எண்ணத்துடன் இரண்டு அமைப்புகளும் செயல்பட்டு வருவதால் இவ் உறவு நீடித்துக்கொண்டு செல்வதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. “ என்று இந்நிகழ்வில் உரையாற்றிய பணியாளர்கள் நிதியுதவியை பெறும் மாணவர்களின் தாய்மார் மற்றும் பாதுகாவலர்கள் முன்னிலையில் தெரிவித்தனர்.

2024 ஆண்டில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கி பல மாணவர்கள் கல்விக்கான கொடுப்பனவை பெற்றுக்கொண்டனர்.

முதலாம் காலாண்டுக் கொடுப்பனவுகள் யாழ் மாவட்டத்தில அந்ததந்த பிரதேச செயலக பிரிவுகளில் உதவி பெற்று வரும் மாணவர்களுக்கு சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் பணியாளர்களின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலகங்களில் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வுகளில் பிரதேச செயலகங்களின் உதவிப் பிரதேச செயலர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள் முதலான அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

நல்லூர், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சங்கானை, தெல்லிப்பளை, வேலணை, உடுவில், கோப்பாய், சண்டிலிப்பாய், மருதங்கேணி, காரைநகர், ஊர்காவற்றுறை முதலான பிரதேசங்களைச்சேர்ந்த மாணவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு முதலான பிரதேசங்களிலும், கிளிநொச்சியில் கரைச்சி பிரதேச செயலக பிரிவிலும் நிதிக்கொடுப்பனவு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உதவிப்பிரதேச செயலர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்டபதில் அரசாங்க அதிபர் திரு.முரளிதரன், மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

## 25 ரயில் சேவைகள் ரத்து

*கொழும்பு, மார்ச் 31*

கரையோர மார்க்கத்திலான ரயில்சேவையில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டுள்ளது.


இதன் காரணமாக கரையோரமார்க்கத்தில் சுமார் 25 ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வெள்ளவத்தை மற்றும் கோட்டை ரயில் நிலையங்களுக்கிடையில் ஒருவழி ரயில் பயணம் மாத்திரமே முன்னெடுக்கப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டி ரயில் நிலையங்களுக்கிடையில் பராமரிப்பு காரணமாகவே இவ்வாறு ரயில் போக்குவரத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக மேலும் கூறப்பட்டது.

எவ்வாறாயினும் இன்று இரவு ரயில்போக்குவரத்து வழமைக்கு கொண்டுவரப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# புற்றுநோய் சிகிச்சைக்கான உலகின் முதல் ஊசி!




**சிதம்பரம் இரவிச்சந்திரன்**

இங்கிலாந்தில் உள்ள நோயாளிகள் உலகில் முதல் முறையாக ஏழு நிமிடங்கள் மட்டுமே செலவாகும் ஊசி மருந்து சிகிச்சை மூலம் புதிய புற்றுநோய் சிகிச்சையைப் பெறவுள்ளனர். அந்நாட்டின் தேசிய சுகாதார சேவைகள் அமைப்பு, மருத்துவ மற்றும் உடல்நலப் பொருட்களுக்கான முகமையின் ஒப்புதலுடன் ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான நோயாளிகளுக்கு ஊசி மூலம் மருந்தை செலுத்தவுள்ளது. இதனால் நோயாளிகளுக்கு மருந்து மூலம் வழங்கப் படும் சிகிச்சை நேரம் மூன்றில் ஒரு பகுதியாகக் குறையும்.

Atezolizumab என்று அழைக்கப்படும் இந்த மருந்து வழக்கமாக நோயாளிகளின் உடலில் ஐவி எனப்படும் நரம்பு வழி முறையில் செலுத்தப்படுகிறது. இந்த ஊசி மருந்தை நோயாளிகள் இப்போது சாதாரண ஊசி போடும் முறையில் பெறுவர். நுரையீரல், மார்பகம், கல்லீரல் மற்றும் ப்ளாடரில் ஏற்படும் புற்றுநோய் போன்ற பல வகை புற்றுநோய்களின் சிகிச்சையில் பயன்படுத்தப்படும் இந்த மருந்து டெசண்ட்ரிக் (Tecentriq) என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த மருந்து இங்கிலாந்தில் ஆண்டுதோறும் 3,600 பேர்களுக்கு நரம்புகள் மூலம் கொடுக்கப்படுகிறது. இதற்கு 30 நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரம் வரை ஆகிறது. இப்போது இது கொடுக்க ஏழு நிமிடங்கள் மட்டுமே ஆகும். கீமோதெரபி (chemotherapy) செய்து கொள்பவர்களும் இந்த ஊசி மருந்தைப் பெறலாம். இது உடலின் புற்றுநோய் செல்களைக் கண்டுபிடித்து அழிக்க உதவுகிறது. ஏலசபைெபந 500 புதிய தொழில் நுட்பங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் ஆரோக்கிய சேவைகள் நோயாளிகளுக்கு இது போன்ற நவீன புற்றுநோய் சிகிச்சையைப் பெற உதவுகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்று புற்றுநோய்க்கான இங்கிலாந்து தேசிய மருத்துவ சேவை கள் பிரிவின் தேசிய இயக்குனர் பேராசிரியர் பீட்டர் ஜான்சன் கூறுகிறார்.

### உலகில் முதல்முறையாக

முதல்முறையாக உலகில் நடைமுறைக்கு வரும் இத்திட்டத்தின் மூலம் நோயாளிகள் மருத்துவமனை யில் செலவிடும் நேரம் குறையும். கீமோதெரபி சிகிச் சையை எடுத்துக் கொள்ள இது உதவியாக இருக்கும். புற்றுநோயாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இது உதவும். தோலுக்கு அடியில் போடப்படும் இந்த முறையால் சிகிச்சை விரைவாக




நடைபெறும். இம் மருந்தை உற்பத்தி செய்யும் ராச் (Roche) நிறுவனத்து டன் செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையின் படி இந்த புதிய மருந்திற்கு நோயாளிகள் கூடுதல் விலை கொடுக்க வேண்டியதில்லை.

புதிய ஊசிமுறை நோயாளிகள் விரைவான சிகிச்சையைப் பெற உதவுகிறது என்று இந்த மருந்தை உற்பத்தி செய்யும் ராச் நிறுவனத்தின் மருத்துவ இயக்குனர் மேரியஸ் கோல்ட்ஸ் கூறுகிறார். குறைவான வலி, குறைந்த அசௌகரியம், நிர்வாக வசதி மற்றும் சிகிச்சைக்காகும் குறைவான நேரம் போன்றவற்றால் தோலுக்கு அடியில் இருக்கும் கொழுப்புத் திசுக்களில் சஃப்க்யுடேனியஸ் (Subcutaneous (SQ or Sub-Q) என்ற முறையில் மருந்தைப் பெறவே பெரும்பாலான நோயாளிகள் விரும்புகின்றனர்.

இந்த மருந்து ஆரம்பநிலையில் உள்ள நுரையீரல் புற்றுநோயாளிகளிடம் அறுவை சிகிச்சை மற்றும் கீமோதெரபிக்கு பிறகு நோய் மீண்டும் ஏற்படுவது மற்றும் இறப்பு விகிதத்தை 34 வீதம் குறைக்கிறது என்று மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. இந்த புதிய சிகிச்சை முறை உடலின் நோய் எதிர்ப்புசக்தி புற்றுநோய் செல்களைத் தாக்கும் ஒரு புரதத்தை செயல்படவிடாமல் தடுக்கிறது. அந்த செல்களை நோய் எதிர்ப்பாற்றல் எளிதாக அடையாளம் காண இத்தொழில்நுட்பம் உதவுகிறது.

இப்புதிய தொழில்நுட்பம் உலகம் முழுவதும் இருக்கும் புற்றுநோயாளிகளுக்கு கொடுக்கப்படும் சிகிச்சை முறையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

## இந்தவார ராசிபலன் 31.03.2024 - 06.04.2024

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 18
நல்ல நேரம்: 9.11 - 10.41
ராகு காலம் : 04.41 - 06.11
திதி : ஷஷ்டி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் மன மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். தொழில் திறன் அதிகரித்து முன்னேற்றம் ஏற்படும். வியாபார நிமித்தமாக தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு மாற்றம் பெற முயற்சிப்பர்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களைக் காண்பீர்கள். மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய சுற்றுலாப் பயணங்கள் சென்ற இன்புறுவீர் கள். புதிய நண்பர்களால் பல நன்மைகள் ஏற்படும். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். எனவே, ஆசிரியர்கள் ஆலோசனைப்படி ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். சிலருக்குப் பணியில் இடமாற்றங்கள் ஏற்படும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். நீங்கள் எப்போதும் பணம் விஷயமான சிந்தனையுடன் இருப்பார்கள். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத சில பிரச்சனைகள் ஏற்படலாம். எடுத்த காரியங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படும். பயணம் செய்யும் போது கவனம் தேவை.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். உங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் மூலம் நன்மைகள் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும் எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் இழப்பைத் தவிர்க்கலாம். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். வியாபாரிகள் எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு உழைத்தால் தான் அவர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற இலாபமோ, பலன் கிடைக்கும். பழுதடைந்த வீடுகள் மராமத்து செய்ய வேண்டிய நிலை உருவாகும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் உடன்பிறப்புக்களிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவிகள் கிடைக்கும். அன்னையின் அன்பு, அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர்பதவிகள் கிடைக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் உங்களுக்கு மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நில வும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பணவரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகளை வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டினையும் பெறுவீர்கள். மங்கை யரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தைப் புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலமாக சேமிக்க முற்படுவீர்கள்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தனலாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வீண்செலவுகளைக் குறைத்து சேமித்து வைப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்கக் கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். சிறப்பான பொதுஜனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய வீடு அமையும். அரசுப் பணியாளர்களுக்கு மனதுக்குப் பிடித்த, புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து கௌரவம் உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்கள் நன்கு படித்து தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறுவார்கள். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும்.

# உச்சி வெய்யிலிலே வெண்ணெய் விற்க மோடி தமிழகம் வருகிறாரா?

நியூசிலாந்து சிற்சபேசன்

இந்தியாவிலே சனநாயகத் திருவிழா களைகட்ட ஆரம்பிக்கின்றது. மார்ச் 16ல் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. ஏப்ரல் 19ம் திகதி முதல் ஜூன் 1ம் திகதி வரை, ஏழு கட்டங்களாக, வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. அதன்பின்னர், ஒரேகட்டமாக, ஜூன் 4ல் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகின்றது.

தேர்தல் தொடர்பிலான பூர்வாங்க அறிவிப்பு வெளியாகும்வரையில் கட்சிகள் காத்திருப்பதில்லை. ஆறு மாதங்களுக்கு முன்னரேயே தேர்தல் சலசலப்பு ஆரம்பமாகிவிடுகின்றது. கூட்டணி ஊடாட்டங்கள் கண்சாடை காட்டத் தொடங்குகின்றன.

இந்தியப் பாராளுமன்றம் இரண்டு அடுக்குகளைக் கொண்டதாகும். அவை மக்களவை, மாநிலங்களவை என அழைக்கப்படுகின்றன. அதிலே, மக்களவைக்கான உறுப்பினர்களையே பொதுமக்கள் வாக்களித்து தெரிவு செய்கின்றனர். அதனாலே, மக்களவைத் தேர்தலையே பாராளுமன்றத் தேர்தல் என்று சுட்டுவது வழமையாகும்.

இந்தியாவிலே 28 மாநிலங்களும், எட்டு யூனியன் பிரதேசங்களும் உள்ளன. சனத்தொகையின் அடிப்படையிலேயே தொகுதிகள் அமைகின்றன. மக்களவையிலே மொத்தமுள்ள 543 உறுப்பினர்களிலே, சுமார் அரைவாசிப் பங்கினர் உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரம், மேற்கு வங்கம், பீகார் மற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களிலிருந்து தெரிவாகின்றனர்.

அந்தவகையிலே தமிழ்நாடு கவனத்தைப் பெறுகின்றது. அத்தோடு, தேசியக் கட்சிகள் தலையெடுக்கத் திணறுகின்ற சூழலும் கவனத்தைச் சுண்டுவதாகும். கடந்த அரைநூற்றாண்டாகத் திராவிடக் கட்சிகளே தமிழக அரசியலில் கோலோச்சுகின்றன.

தமிழ்நாட்டில் 39 தொகுதிகளும், புதுச்சேரியின் ஒற்றைத் தொகுதியையும் சேர்த்து 40 மக்களவை தேர்தல் தொகுதிகள் என்பதாகவே தமிழ்நாட்டின் எண்ணிக்கை கவனிக்கப்படுகின்றது. ஏப்ரல் 19ம் திகதி ஒரே கட்டமாக தமிழகத்திலும் புதுச்சேரியிலும் வாக்குப்பதிவு நடைபெறுகின்றது.

தமிழ்நாட்டிலே இரண்டு அணிகளை மையப்படுத்தியதாகவே அரசியல்களம் காணப்படுகின்றது. ஒன்று, திராவிட முன்னேற்றக் கழகம். மற்றையது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் பணிகளை திட்டமிட்டே செயற்படுத்துகின்றது. 2024 மக்களவைத் தேர்தல் கூட்டணியை, தேர்தல் அறிவிப்பு வெளியாக முன்னரே அறிவித்துவிட்டது. தொகுதிப்பங்கீட்டையும் வேகமாக முடித்திருந்தது. மொத்தமுள்ள 40 தொகுதிகளில் - 21 திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், 10 காங்கிரஸ் கட்சிக்கும், தலா 2 கம்யுனிஸ்ட், மார்கசிய கம்யுனிஸ்ட், மற்றும் தொல் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கும், தலா ஒன்று வைகோவின் மறுமலர்ச்சி திமுக, முஸ்லிம் லீக் மற்றும் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கும் ஒதுக்கப்பட்டன. அடுத்தகட்டமாக, எந்தெந்த தொகுதிகளில், எந்தக்கட்சி போட்டியிடுவது என்பதை முடிவெடுத்தது. அந்தவகையிலே, தேர்தலை எதிர்கொள்ளக்கூடிய தயார்ப்படுத்தலை படிப்படியாக செயற்படுத்துகின்றது.



மறுவளத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நடுக்கடலில் தத்தளிக்கும் கப்பல் ஆகியிருக்கின்றது. ஜெயலாலிதாவின் மறைவுக்குபின் கட்சியினுடைய திரட்சி வீரியமிழக்கின்றது. தற்போது, எடப்பாடி பழனிச்சாமியின் செல்வாக்கு கட்சியிலே ஓங்கியுள்ளது. இருந்தபோதிலும், ஓ.பன்னீர்செல்வத்தை ஓரங்கட்டிய தன் பாதிப்பு மறைகரமாகத் தெரிகின்றது. கூடவே, ஜெயலதாவின் வளர்ப்புமகனான டிடிவி தினகரனின் தனிக்கட்சியான அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தனி ஆவர்த்தனமும் இடைஞ்சலாக உள்ளது. காரணம்: தென்மாவட்டங்களில் சுமார் ஐந்து விழுக்காடு வரையான வாக்குவங்கி டிடிவி தினகரனிடம் உள்ளதெனக் கணிக்கப்படுகின்றது. ஜெயலலிதாவுக்குப் பிந்தைய காலத்திலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடனான கூட்டணியிலேயே பாரதிய ஜனதாவும் தேர்தல்களைச் சந்தித்திருக்கின்றது. தற்போது அந்தநிலை இல்லை. பாரதிய ஜனதா கூட்டணியிலிருந்து விலகுவதாக, 2023 செப்டெம்பரில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்தது. ஆனாலும்கூட, 2024 மக்களவைத் தேர்தலிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமைத்துக் கொள்ளவே பாரதிய ஜனதா விரும்பியது. காரணம்: சில தொகுதிகளிலேனும் வெற்றி பெறுவதற்கு, பலமான கூட்டணி அவசியம் என்பதை பாரதிய ஜனதா நம்புகின்றது. ஆனால் அத்தகையதொரு கூட்டணி அமையவேயில்லை. அதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உட்கட்சிப் பிளவுகளும் கூட முட்டுக்கட்டையாகியிருக்கலாம்.


அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமைத்தே பாரதிய ஜனதாவும், பட்டாளி மக்கள் கட்சியும் 2019 மக்களவைத் தேர்தலை எதிர்கொண்டன. அதேபோன்றதொரு கூட்டணி 2024 மக்களவைத் தேர்தலிலே ஏற்பட்டிருந்தால், வடமாவட்டங்கள், கோவை மற்றும் தென்தமிழகத்தில் வெற்றி வாய்ப்புக்களை அதிகரித்திருக்கலாம். எதுஎப்படியோ, எடப்பாடி பழனிச்சாமியின் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணிக் கூடாரத்திலே நுழைய முடியவில்லை. அதனால், பட்டாளி மக்கள் கட்சியை இழுத்துக்கொண்டுபோய் பாரதிய ஜனதா மற்றுமொரு கூட்டணியை அமைத்திருக்கின்றது. கூடவே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து புறமொதுங்கிய ஓ.பன்னீர்செல்வமும், டிடிவி தினகரனும் பாரதிய ஜனதாவின் கூடாரத்திலே ஒதுங்கியுள்ளனர். அந்தவகையிலே, இரண்டு கழகங்களுக்கு வெளியே பாரதிய ஜனதா தனியானதொரு கூட்டணியை உருவாக்கியுள்ளது. அதன்மூலமாக, கழகங்களின் தோளிலேயே தேசியக் கட்சிகள் சவாரி செய்கின்றன என்னும் பிம்பத்தை பாரதிய ஜனதா மாற்ற எத்தனிக்கின்றது.

எதுஎப்படியாகிலும், தமிழ்நாட்டில் கையளவு வெற்றியையேனும் பெற்றுவிடவேண்டும் என மோடி தலையால் தண்ணீர் குடிக்கின்றார். தமிழ்மொழியின் அருமை பெருமைகளைப் பேசுகின்றார். தமிழ்நாட்டுக்கு வரும்போது புதிய சக்தி பிறக்கிறது என்கிறார். தமிழ்நாட்டிலே இருமல் தும்மல் சத்தம் கேட்டால் போதும், உடனேயே பிளேன் பிடித்து வந்து இறங்கிவிடுகின்றார். இவையெல்லாம் உச்சி வெய்யிலில் வெண்ணெய் விற்ற கதையாகிவிடுமா என்பது தேர்தல் முடிவு வரும்போது தெரிந்துவிடும். ●

# அடுத்த இலக்கு சீனாவா, இந்தியாவா?

ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் சிரியாவிலும், ஈராக்கிலும் செயல் பட்டு வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஒடுக்கப் பட்ட பிறகும், அந்த பயங்கரவாத இயக்கத்தின் செயல்பாடுகள் முடங்கிவிடவில்லை என்பதன் வெளிப்பாடுதான் ரஷியத் தலைநகர் மாஸ்கோ வில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டிருக் கும் தாக்குதல்.

மாஸ்கோவின் புகர் பகுதியில் அமைந்த ‘க்ராகஸ் சிட்டி ஹால்’ என்கிற அரங்கத்தில் நடத்தப்பட்டத் தாக்குதலில் இதுவரை 143 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். நூற்றுக்கும் மேற்பட் டவர்கள் காயமடைந்திருக்கிறார்கள். ‘பாப்’ இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்ததால் ‘க்ராகஸ் சிட்டி ஹால்’ அரங்கம் நிரம்பி வழிந்து கொண் டிருந்தது. நான்கு பயங்கரவாதிகள் தங்குதடை இல்லாமல் அரங்கத்தில் நுழைந்து இயந்திரத் துப்பாக்கிகளால் அங்கிருந்தவர்களைச் சுட்டு வீழ்த்தியதோடு, அந்த அரங்கத்தைத் தீக்கிரை யாக்கிவிட்டு வெளியேறி இருக்கிறார்கள். அப்பாவி மக்க ள் மீது காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்திவிட்டு அவர்களால் தப்பி வெளியேற முடிந்திருக்கிறது. தாக்குதலை நிகழ்த்திவிட்டு 300 கி.மீ. பயணித்து எல்லையைக் கடக்கும்போது அவர்கள் நால்வரும் ரஷ்யப் படை வீரர்களால் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஐந்து லட்சம் ரூபிள் தரப்படும் என்பதற்காக அந்தத் தாக்குதலை நடத்தியதாக அந்தக் கூலிப்படையினர் தெரிவித்திருப்பது நம்பும்படி இல்லை.



பெரும்பாலும் ஐ.எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தற்கொலைப் படையினராக இருப்பதுதான் வழக்கம். பணத்திற்காகத் தாக்குதல் நடத்துவது இஸ்லாமியக் கொள்கைக்கு விரோதமான ‘ஹராம்’. அதனால், அந்தக் கூற்று திசைதிருப்பும் முயற்சியாகத்தான் தெரிகிறது. மார்ச் 7-ஆம் தேதி யூதர்களின் தேவாலயமான ‘சினகாக்’ ஒன்றின் மீது ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்த இருந்த தாக்குதலைத் தடுத்து நிறுத்தியதாக ரஷ்ய உளவுத் துறை தெரிவித்திருக்கிறது. அப்படி இருக்கும்போது, ‘க்ராகஸ் சிட்டி ஹால்’ அரங்கு நிகழ்ச்சிக்கு எந்தவிதப் பாதுகாப்பு ஏற்பாடும் செய்யப்படாதது ஏன் என்கிற கேள்வி எழுகிறது. அமெரிக்க உளவுத் துறை, ரஷ்யாவில் பயங்கவரவாதத் தாக்குதல் குறித்து தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாக மார்ச் 7 ஆம் தேதி முன்னெச்சரிக்கை செய்திருந்தது. பொதுமக்கள் கூடும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கும்படி மாஸ்கோவிலுள்ள அமெரிக்கா மற்றும் ஏனைய பல நாடுகளின் தூதரகங்கள், மாஸ்கோவிலுள்ள தங்களது நாட்டவரை எச்சரித்திருந்தன. பொதுவாக இதுபோன்ற தாக்குதல்களைத் தற்கொலைப் படையினர்தான் நடத்துவார்கள். அல்லது சிலரை விடுவிப்பதற்கோ, வேறுபல காரணங்களுக்காகவோ நிகழ்த்துவது வழக்கம். அவை எதுவும் இல்லாமல், தாக்குதல் நிகழ்த்திவிட்டு வாகனத்தை மாற்றாமல் அவர்களால் 300 கி.மீ. தடையின்றி பயணிக்க முடிந்ததனால், அதன் பின்னணியில் ரஷ்ய உளவுத் துறையும் இருந்திருக்கக் கூடும் என்கிற ஐயப்பாடும் எழுகிறது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் அதற்கு முந்தைய பத்து ஆண்டுகளிலும் ரஷ்யா பல பயங்கரவாதத் தாக்குதலுக்கு உள்ளானது. ரஷ்யாவை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்பேன் என்கிற புடினின் வாக்குறுதிதான் அவரை ரஷ்யர்கள் பதவியில் அமர்த்தியதற்கு முக்கியக் காரணம். புடினும், பயங்கரவாதத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கினார். இப்போது மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க முற்பட்டிருப்பதுதான், அனைவரையும் அச்சத்தில் ஆழ்த்தி இருக்கிறது. ரஷ்யாவில் காணப் படும் ஐ.எஸ். பயங்கரவாதத்திற்கு இரண்டு முக்கி யமான காரணங்கள் உண்டு. 1994-இல் செஷ்னி யாவின் பிரிவினையை ரஷ்ய ராணுவம் ஒடுக்கிய தில் இருந்து தொடங்குகிறது அந்தப் பகுதியின் பயங்கரவாதம். தெற்கு ரஷ்யப் பகுதியின் கருங்கடலையொட்டிய வடக்கு காக்கஸ் பகுதி ஐ.எஸ். பயங்கரவாதிகளின் ஊற்றுக்கண்ணாகவும், நாற்றங்காலாகவும் தொடர்கிறது. சிரியாவிலும், ஈராக்கிலும் ஐ.எஸ். அமைப்பில் இணைந்து போரிட்டவர்களில் பெரும்பாலோர் இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் 2002 அக்டோபரில், மாஸ்கோ திரையரங்கில் 800 பேரை பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்தது் 2015 அக்டோபரில் எகிப்திலிருந்து மாஸ்கோவுக்கு பறந்த ரஷ்யாவின் பயணிகள் விமானத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்த்தது. ரஷ்யாவில் நடைபெற்ற ஏனைய பல தாக்குதல்கள் ஆகியவை செஷ்னிய பயங்கரவாதிக ளின் செயல்பாடுகள்தான். சிரியா உள்நாட்டுப் போரில் ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிராக, அதிபர் பஷார்-அல்-அசாதை விளாதீமிர் புடின் ஆதரித்தார் என்பதில் தொடங் குகிறது அவர் மீதான ஐ.எஸ். அமைப்பின் வெறுப்பு. செஷ்னியா பயங்கரவாதிகளும், ஐ.எஸ். பயங்கரவாதிக ளும் இணைந்து செயல்படுகிறார்கள். சிரியாவில் ஒடுக் கப்பட்ட ஐ.எஸ். இயக்கம் இப்போது பல்வேறு நாடுக ளில், பல்வேறு பிரிவுகளாகச் செயல்படுகிறது. அதில் ஒரு பிரிவான ஐ.எஸ். (கொராஸன்) மாஸ்கோ தாக்குதலுக்குத் தாங்கள்தான் காரணம் என்று பொறுப்பேற்றிருக் கிறது. அண்மைக்காலமாக, இந்தியாவில் பல இளைஞர் கள் ஐ.எஸ். அமைப்பால் கவரப்பட்டு, மூளைச்சலவைக்கு ஆளாகி வருகிறார்கள். மார்ச் 20-ஆம் தேதி குவாஹாட் டியில் ஹாரிஸ் ஃபரூக்கி என்பவர் கைது செய்யப்பட் டிருக்கிறார். இவரைப் போல, பலர் பல மாநிலங்களில் ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பில் இருப்பதாகக் கூறப்ப டுகிறது. ‘அப்பாவி உய்கர் முஸ்லிம்களின் ரத்தக் கறை படிந்த கம்யூனிஸ்ட் இறை மறுப்பாளர்களுக்கு எதிராக ஆயுதம் எடுப்போம்’ என்கிற அறைகூவலை எழுப்பி, சீனாவையும் குறி வைக்கிறது ஐ.எஸ். (கொராஸன்). ரஷ்யாவைத் தொடர்ந்து அதன் அடுத்த இலக்கு இந்தியாவா அல்லது சீனாவா என்று தெரியவில்லை. எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். (தினமணி)

# வெளிநாட்டுச்சதி குறித்து வெளியில் சொல்வதற்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை வரை ஏன் காத்திருந்தார் சபாநாயகர்?



வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கையில் கடந்த காலத்திலும் பாராளுமன்ற சபாநாயகர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டிருந்தாலும், தற்போதைய சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணை முன்னையவற்றில் இருந்து வேறுபட்ட ஒன்றாகும்.

முன்னைய சபாநாயகர்கள் அரசியலமைப்பை மீறியதாக குற்றஞ்சாட்டி அவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டதில்லை. அதன் காரணத்தினால்தான் சபாநாயகர் அபேவர்தன 2022 அறகலய மக்கள் கிளர்ச்சியின்போது ஆட்சிப்பொறுப்பை ஏற்குமாறு தன்மீது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகளினால் நிர்ப்பந்தம் பிரயோகிக்கப்பட்டபோதிலும், அதற்கு பணிந்துபோகாமல் உறுதியாக நின்று அரசியலமைப்பைப் பாதுகாத்த ஒருவராக தன்னை காண்பிப்பதற்கு சபையில் அறிக்கையொன்றை வெளியிடவேண்டும் என்று தீர்மானித்தார் போலும்.

தற்போது கிடைக்கக்கூடிய பதிவுகளின்படி பாராளுமன்ற சபாநாயகருக்கு எதிரான முதலாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை 1963 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. பத்திரிகை ஆணைக்குழுவுக்கு எதிரான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படுவதை தடுப்பதற்கு அன்றைய சபாநாயகர் ஆர்.எஸ்.பெல்பொல சபையை ஒத்திவைத்த காரணத்தினாலேயே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்க்கட்சிகள் கொண்டுவந்தன.

1966 ஆம் ஆண்டில் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிராகரித்ததற்காக அன்றைய பிரதி சபாநாயகர் சேர்லி கொறியாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

1980 ஆம் ஆண்டில் சபாநாயகர் பாக்கீர் மாக்காருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. தேர்தல் ஆட்சேப மனுவொன்றை அடுத்து அன்றைய கலவான தொகுதி பாராளுமன்ற உறுப்பினரை உயர்நீதிமன்றம் பதவிநீக்கம் செய்ததைத் தொடர்ந்து மூண்ட சர்ச்சையே அதற்கு காரணமாகும். சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதற்கு பாக்கீர் மாக்கார் அனுமதித்தார். அவரது உத்தரவு பாராளுமன்றத்தை அவமதித்ததாகக் கூறியே அவருக்கு எதிராக பிரேரணை கொண்டுவரப்பட்டது.

1991 ஆம் ஆண்டில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையை நிராகரித்தமைக்காக சபாநாயகர் எம்.எச். முஹம்மதுவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. (முஹம்மது முன்னிலையிலேயே அந்த பிரேரணையில் தாங்கள் கைச்சாத்திட்டதாக பாராளுமன்ற விவாதத்தில் சில உறுப்பினர்கள் பேசினார்கள் என்பது வேறு விடயம்) பிறகு 1992 ஆம் ஆண்டில் 18 குறைநிரப்புப் பிரேரணைகளை சபையில் விவாதமின்றி நிறைவேற்றுவதற்கு அனுமதித்தமைக்காக மீண்டும் அவருக்கு எதிராக ஒரு பிரேரணை கொண்டுவரப்பட்டது.

ஆனால், சபாநாயகர் அபேவர்தனவுக்கு எதிரான பிரேரணை அண்மையில் தோற்கடிக்கப்பட்டதைப் போன்றே அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைகளும் தோற்கடிக்கப்பட்டன. இந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் சபாநாயகர்களை பெரும்பாலும் ஆளும் கட்சியே காப்பாற்றியிருக்கிறது.

தனக்கு எதிரான பிரேரணை மூன்று நாள் விவாதத்தின் இறுதியில் மார்ச் 21 மாலை தோற்கடிக்கப்பட்ட பிறகு அறிக்கையை வெளியிட்ட சபாநாயகர் அபேவர்தன, அறகலய மக்கள் கிளர்ச்சியின்போது அரசியலமைப்பை மீறி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்று புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறு உள்நாட்டு சக்திகளும் சர்வதேச சக்திகளும் தன் மீது பிரயோகித்த நெருக்குதல்களை உறுதியாக நின்று நிராகரித்து அரசியலமைப்பை பாதுகாத்ததாக பெருமைப்பட்டுக் கொண்டார்.

உயர்நீதிமன்றம் விதந்துரைத்த திருத்தங்களில் பலவற்றை சேர்க்காமல் அரசாங்கம் கடந்த ஜனவரியில் நிறைவேற்றிய இணையவெளி பாதுகாப்பு சட்டமூலத்தை கைச்சாத்திட்டு சான்றுப்படுத்தியதன் மூலமும் பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோனின் நியமனத்துக்கு அங்கீகாரம் வழங்கியதில் அரசியலமைப்பு பேரவையில் வாக்கெடுப்பின்போது நடந்துகொண்ட விதம் மூலமும் சபாநாயகர் அரசியலமைப்பை மீறியதாக நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியிருந்தன.

அதனால் அரசியலமைப்பை மீறி ஒருபோதும் செயல்படாதவர் போன்று தனனை "நிரூபிப்பதே" அவரின் அறிக்கையின் நோக்கமாக இருந்தது.

'அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறு பலம்பொருந்திய சக்திகள் நெருக்குதலைக் கொடுத்தன. கொந்தளிப்பான நிலைவரத்தை தணித்து நாட்டைப் பாதுகாப்பது அல்ல, சட்டவிரோதமான அரசாங்கம் ஒன்றை அமைப்பதன் மூலமாக இலங்கையை ஒரு லிபியாவாக அல்லது ஆப்கானிஸ்தானாக மாற்றுவதே அவர்களின் நோக்கம்.

'ஜனாதிபதவியைப் பொறுப்பேற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கத் தவறினால் எனது வீட்டைச் சுற்றிவளைத்து எனக்கு ஊறு செய்யப்போவதாக முக்கியமான சில மதத்தலைவர்கள் கூட அச்சுறுத்தினார்கள். அன்று என்மீது நெருக்குதலைப் பிரயோகித்த அரசியல்வாதிகளில் சிலர் எனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும் கைச்சாத்திட்டிருந்தனர்.

'நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கைச்சாத்திட்ட எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் என்னிடம் தனிப்பட்ட முறையில் மன்னிப்புக் கேட்டதுடன் விவாதத்தில் பஙகேற்கவுமில்லை. வாக்களிப்பில் கலந்துகொள்ளவும் இல்லை.



**எதிர்க்கட்சிகளினால் நேர்மையற்ற முறையில் குற்றஞ்சாட்டப்படும் ஒரு 'தேசபக்தனாக' தன்னைக் காண்பிக்கும் முயற்சியே சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவின் அறிக்கை.**

'ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச என்னனுடன் தொடர்புகொண்டு எனக்கு அதிகாரத்தை கைமாற்றுவது தொடர்பில் கருத்துக்களைக் கேட்டார். ஆனால், ஒரு பிரதமரும் அமைச்சரவையும் இல்லாமல் பாராளுமன்ற சபாநாயகர் ஜனாதிபதியாக செயற்படுவதற்கு அதிகாரமளிக்கும் எந்த ஏற்பாடும் அரசியலமைப்பில் இல்லாத நிலையில் நான் ஆட்சியைப் பொறுப்பேற்றால் நாடுபூராவும் பிராந்திய தலைவர்கள் உருவெடுத்து அராஜக நிலை தோன்றும் என்று கூறியபோது ராஜபக்ச அதை விளங்கிக் கொண்டார்.

'அரசியலமைப்பின் பிரகாரம் புதிய அரசாங்கம் அமைப்பது தாமதிக்கப்பட்டிருந்தால் நாடு பிளவடைவதற்கு அது வழிவகுத்திருக்கும். நாட்டின் வெவ்வேறு பகுதிகளை பல்வேறு சக்திகள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருக்கும்" என்று சபாநாயகர் கூறினார்.

லிபியாவை அல்லது ஆப்கானிஸ்தானை ஒத்த நிலைவரத்தை இலங்கையில் தோற்றுவிக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்ததாக அவர் குற்றஞ்சாட்டுகின்ற அந்த வெளிநாட்டுச் சக்திகளின் சதி முயற்சியை முறியடித்த தனது உறுதியான செயற்பாட்டை இதுகாலவரை எதற்காக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தாமல் தனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வரும்வரை காத்திருந்தார்?

மக்கள் கிளர்ச்சியின் பின்னணியில் இருந்ததாகக் கூறப்படும் வெளிநாட்டுச்சதி குறித்து தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கடந்தவருடம் வெளியிட்ட "ஒன்பது மறைக்கப்பட்ட கதைகள்" என்ற நூலில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஷங் சபாநாயகரை நேரடியாகச் சந்தித்து ஆட்சியைப் பொறுப்பேற்குமாறு நெருக்குதல் கொடுத்ததாக குறிப்பிட்டிருந்தார். ஆனால், அந்த வேளையில் சபாநாயகர் அதை மறுத்தார். இப்போது கூட அவர் தனது அறிக்கையில் எந்த நாட்டினதோ அல்லது எந்த நபரினதோ பெயரையும் குறிப்பிடுவதைத் தவிர்த்துக்கொண்டார்.

வெளிநாட்டுச்சதி குறித்து முதலில் வீரவன்சவும் மிகவும் அண்மையில் கோட்டாபயவும் தங்களது நூல்களில் முன்வைத்த குற்றச்சாட்டுக்களையே சபாநாயகரும் தனது அறிக்கையில் ஒப்புவித்திருக்கிறார். எதிரணியினரால் நேர்மையற்ற முறையில் குற்றஞ்சாட்டப்படுகின்ற ஒரு "தேசபக்தனாக" தன்னைக் காட்டுவதே அவரின நோக்கம் என்று தெரிகிறது.

தேசபந்து தென்னக்கோனின் நியமனத்தை அங்கீகரிப்பதற்கு அரசியலமைப்பு பேரவையில் தனது வாக்கைப் பயன்படுத்தியதற்கு நாட்டின் பாதுகாப்பு மீதான தனது அக்கறையே காரணம் என்றும் சபாநாயகர் கூறினார்.

ஜனநாயக விரோத செயல்களிலும் அதிகார துஷ்பாரயோகம் மற்றும் அரசியலமைப்பு மீறல்களைச் செய்கின்ற அரசியர்வாதிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு "தேசிய பாதுகாப்பையும் தேசபக்தியையும்" வசதியான கேடயங்களாக கையிலெடுப்பது நமது நாட்டில் ஒன்றும் புதிய விடயமல்ல.

இணையவெளி பாதுகாப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் முறைப்படி நிறைவேற்றப்பட்டதாக சட்டமா அதிபர் எழுத்துமூலம் உத்தரவாதத்தை வழங்கியதை அடுத்தே அதில் கைச்சாத்திட்டு சான்றுப்படுத்தியதாகக் கூறிய சபாநாயகர் பொலிஸ்மா அதிபரை தெரிவுசெய்ததில் தனது வாக்கு தவறானது என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு குறித்து குறிப்பிடுகையில் தேசபந்து தென்னக்கோனின் நியமனத்தை எதிர்ப்பதற்காகவே அரசியலமைப்பு பேரவையியின் இரு உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்று கருதப்படுமானால் தனது வாக்கை அளிக்கப்போவதாக ஜனாதிபதிக்கு அறிவித்ததாக தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசாங்கத் தரப்புக்கு பாராளுமன்றத்தில் இருக்கும் பெரும்பான்மை பலம் காரணமாக தோற்கடிக்கப்பட்டதை அரசியலமைப்பை மீறி சபாநாயகர் செயற்படவில்லை என்று நிரூபிக்கப்பட்டதாக அர்த்தப்படுத்தமுடியாது.

அரசியலமைப்பு பேரவையில் சபாநாயகர் தனது வாக்கை பயன்படுத்தியது குறித்து முன்னாள் சட்டமா அதிபரும் நீதியமைச்சின் நிரந்தரச் செயலாளருமான அரசியலமைப்புச்சட்ட நிபுணர் கலாநிதி நிஹால் ஜெயவிக்கிரம அண்மையில் எழுதிய கட்டுரை ஒன்றின் சில பகுதிகளை இங்கு மீள்பிரசுரம் செய்வது பிரயோசனமானதாக இருக்கும்.

'பொலிஸ்மா அதிபர் பதவிக்கு ஜனாதிபதியினால் சிபாரிசு செய்யப்பட்டு அரசியலமைப்பு பேரவையினால் அங்கீகரிக்கப்படும் ஒருவரைத் தவிர வேறு எவரும் நியமிக்கப்படமுடியாது என்று அரசியலமைப்பு கூறுகிறது.

'ஏகமனதான தீர்மானம் ஒன்றை எட்டுவதற்கே அரசியலமைப்பு பேரவை முயற்சிக்கவேண்டும் என்கின்ற அதேவேளை, பேரவையின் கூட்டத்தில் பிரசன்னமாக இருக்கும் ஐந்துக்கும் குறையாத உறுப்பினர்களின் ஆதரவு இல்லாத பட்சத்தில் பேரவையின் தீர்மானம் செல்லுபடியாகாது என்றும் அரசியலமைப்பு கூறுகிறது.

(14ம் பக்கம் பார்க்க)

# பதின்மூன்றை வெட்டித்தள்ளும் ரணில் 1,000 விகாரைகள் இலக்குடன் சஜித் எலியட்ட தாண்ட; அணியில் அனுர

**பனங்காட்டான்**

இந்த வருடத்தில் நடைபெற்றேயாக வேண்டிய ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுமா, இடம்பெறாதா, ஒரேயடியாக பின்தள்ளப்பட்டுப் போகுமா என்ற கேள்விகள் அரசியல் கட்சிகளிடையே தொடர்ந்து நிலவி வருகிறது.

இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பது போன்று, வருகின்ற அக்டோபர் மாத முதலாவது சனிக்கிழமை (5ம் திகதி) தேர்தல் நடைபெறுமென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு எத்தனை அவுன்ஸ் நம்பகத்தன்மை கொண்டதென்ற அடுத்த கேள்வி இப்போது முனைப்புப் பெற்று நிற்கிறது. இதற்கான முதற்காரணம், ரணிலை ஜனாதிபதி அரியாசனத்திலேற்றி இன்றுவரை இறக்காமல் பாதுகாத்து வருகின்ற பொதுஜன பெரமுன நாடாளுமன்ற தேர்தலை முதலில் நடத்த வேண்டுமென அடாப்பிடியாக நிற்பதே.

இந்தக் கோரிக்கையை ரணிலிடம் நேரடியாக முன்வைத்தவர் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பசில் ராஜபக்ச. எதற்குமே நேரடியாகப் பதிலளிக்காது அலைக்கழித்து வரும் ரணில், ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் கட்டாயம் நடத்தப்பட வேண்டியது என்று மட்டும் நாசூக்காக பதிலளித்துவிட்டு, தேர்தலுக்கான அக்டோபர் 5ம் திகதியை வெளியிட்டார்.

ரணிலிடம் தமது பருப்பு அவியாது என்பதைப் புரிந்து கொண்ட பசில், அண்மையில் இடம்பெற்ற பொதுஜன பெரமுன செயற்குழுக் கூட்டத்தில் - நான் பொதுத்தேர்தலை முதலில் நடத்துமாறு ரணிலிடம் கோரினேன். அதற்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை. எனவே அவரது விருப்பம்போல் செயல்படுமாறு கூறினேன் என்று தமது இன்றைய நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

இதனாலோ என்னவோ பெரமுனவின் தேசிய அமைப்பாளராக "குட்டி ராசா" நாமல் ராஜபக்சவை கட்சி நியமித்துள்ளது. நாமலை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த வேண்டுமென விடாப்பிடியாக கேட்டு வரும் கட்சியின் ஓர் அணியினருக்கு இது வாய்ப்பாகப் போயிற்று. இவர்கள் தொடர்ந்து அந்த வாய்ப்பாட்டையே வாசித்து வருகின்றனர்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க - சிறிமாவோ பண்டாரநாயக்க தம்பதியினரின் ஏகபுதல்வரான அனுர பண்டாரநாயக்கவும் இன்றைய நாமல் ராஜபக்ச போன்று உயர்மட்டத்தில் வைத்துப் பார்க்கப்பட்டவர். தமது பெற்றோர் அமர்ந்த ஆசனத்தில் (அப்போது பிரதமர் பதவி) தாமும் ஏற வேண்டுமென துடியாய்த் துடித்தவர் அனுர பண்டாரநாயக்க. ஒரு கட்டத்தில் தமது தந்தை உருவாக்கிய சிறீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து விலகி ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து சபாநாயகர் பதவியைப் பெற்றவர்.

பொறுமை காத்து அவர் அரசியல் செய்திருந்தால் அவரது சகோதரி சந்திரிகா குமாரதுங்க பெற்ற பிரதமர் மற்றும் ஜனாதிபதிப் பதவிகள் அவருக்கே கிடைத்திருக்க வேண்டியவை. வெள்ளை மாடு கொழுத்தாலும் வழுவழுப்பு நீங்காது; என்பது போல அனுர பண்டாரநாயக்க பெயரளவில் குடும்ப வாரிசாக உயர்ந்திருந்தாலும் அரசியல் செயற்பாட்டிலும் அந்த நிலைக்கு வளர்ந்திராததால் எல்லாமே பொரிமாத்தோண்டி கதையானது வரலாறு.

> தமிழர் பிரச்சனைத் தீர்வுக்கென உருவான பதின்மூன்றாம் திருத்தத்தை வெட்டித் தள்ளும் வேலையில் ரணில் முனைப்பாக உள்ளார். வடக்கில் ஆயிரம் விகாரைகள் கட்டும் தமது எண்ணத்தை நிறைவேற்ற சஜித் ஆவலுடன் காத்திருக்கிறார். அனுர குமாரவின் மொழிக் கொள்கை என்ன என்பதற்கு கனடாக் கூட்டத்தில் கூறப்பட்ட 'எலியட்ட தாண்ட' பதில் போதும். இவைகளுக்குப் பதிலளிப்பதற்கான ஒரே தீர்வு தமிழர் தரப்பிலிருந்து பொதுவேட்பாளர் ஒருவர் போட்டியிடுவதுதான் என்றால் தவறிருக்காது!

இந்த அரிச்சுவட்டிலேயே நாமலும் இன்று நடைபயில்கிறார். ரணிலும் நாமலும் மலையும் மடுவும் போன்றவர்கள். இதனை நன்கு புரிந்து கொண்டதால்தான் நாமல் இப்போது ஜனாதிபதிப் போட்டியில் இறங்குவதை அவரது தந்தை மகிந்த விரும்பவில்லை. இன்னுமொரு ஐந்து ஆண்டுகள் "நம்மடை" ஆள் ரணில் ஜனாதிபதியாக இருப்பாரானால், அடுத்து வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் நாமல் வயதாலும் அனுபவத்தாலும் தகுதி பெற்றுவிடுவாரென்று மகிந்த கருதுகிறார்.

ஏறத்தாழ பசிலும் இப்போது அந்த நிலைப்பாட்டுக்கு வந்துவிட்டார். அதனாற்தான், நெருக்கடியான நேரத்தில் ஆட்சியை பொறுப்பேற்ற ரணில் பொருளாதார ரீதியாக நாட்டைக் காப்பாற்றி (தங்களையும் காப்பாற்றினாரென பகிரங்கமாகக் குறிப்பிடாமல்) மக்களுக்கு பசி நீக்குகிறார் என்று சான்றிதழ் கொடுத்துள்ளார்.

பசில் இவ்வாறான முடிவெடுத்ததற்கு மூன்று காரணங்கள் உண்டு.

1. ரணிலுக்கெதிராக பெரமுன ஒருவரை களமிறக்கினால் ஏற்கனவே அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்களாக இருப்பவர்கள் ரணிலின் பக்கம் செல்வர். இதனால் பெரமுன பிளவடையும்.

2. எக்காரணம் கொண்டும் ஜே.வி.பி. வேட்பாளர் அனுர குமார வெற்றி பெறுவதை அனுமதிக்கக்கூடாது.

3. சஜித் பிரேமதாசவின் எதிர்காலத்தை சூனியமாக்கி அரசிலிருந்து அப்புறப்படுத்த ஒரேவழி ரணிலை மீண்டும் ஜனாதிபதியாக்குவதே.

ஆக, இன்றைய களநிலைவரப்படி ஆட்சித் தரப்பின் ஆதரவோடு ரணில் ஜனாதிபதி வேட்பாளராகிறார் என்பது நம்பக்கூடிய நிச்சயமாகிறது.

எனினும், ரணில் தொடர்ந்து பெரமுன, சஜித் அணி ஆகியவற்றை பிய்த்தெறியும் கைங்கரியங்களிலேயே ஈடுபட்டு வருகிறார். அதேசமயம் நாடு முழுவதும் சென்று தேர்தல் அட்வான்ஸ் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார். அதிகாரபூர்வமாக வெசாக் தினத்தின் பின்னரேயே தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகுமெனை அறிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் செப்டம்பர் 17க்கும் அக்டோபர் 17க்குமிடையில் நடைபெறுமென்று நம்ப வைக்கும் அறிவிப்புகளையும் விடுத்து வருகின்றார்.

கடந்த ஒருவாரத்தில் பருத்தித்துறை, றாகம மருத்துவமனைகளில் புதிய கட்டிடங்களை கையளித்தது, நாட்டின் மிகப் பெரிய மகப்பேற்று மருத்துவமனையை காலியில் திறந்து வைத்தது, அரச ஊழியர்களுக்கு ஏப்ரலில் பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு, ஓய்வூதியகாரர்களுக்கு ஐயாயிரம் ரூபா சம்பள உயர்வு, பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதிய உணவு என பல நிகழ்ச்சிகளில் ரணில் நேரடியாக பங்கேற்று வருவதானது, "ஐயா லெக்ஷன் கேட்கிறார்" என்ற பிரபல நாடகத்தை நினைவூட்டுகிறது.

இப்படியான சாதக சமிக்ஞைகள் காணப்படும் அதேசமயம், தேர்தலுக்குப் பொறுப்பான தேர்தல் ஆணையாளர் இரண்டு விடயங்களை அறிவித்து அரசியலில் திடீர் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் இவ்வருடத்தில் நடத்தக்கூடிய வலுவுடன் தேர்தல் திணைக்களம் இருப்பதாகவும், ஜனாதிபதித் தேர்தலை செப்டம்பர் 18ம் திகதி நடத்தினால் நல்லது எனவும் இவர் தெரிவித்ததாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தேர்தல் திணைக்களம்தான் தேர்தல்களை நடத்தினாலும் ஆட்சித் தரப்பில் ஜனாதிபதி தமக்கான சகல நிறைவேற்று அதிகாரங்களையும் பயன்படுத்தி முடிவெடுப்பார் என்பதே யதார்த்தம்.

கடந்த வருடம் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை விடுத்த தேர்தல் திணைக்களம் அதற்கான திகதி அறிவித்து, அபேட்சகர் கட்டுப்பணம் செலுத்தி வாக்குச் சீட்டுகளையும் அச்சடித்துக் கொண்டிருந்த வேளையில் - தேர்தலுக்குப் பொறுப்பு தேர்தல் ஆணையாளர், வாக்குப் பெட்டி ஜனாதிபதியின் கைகளில் - என்ற தலைப்பில் இந்தப் பத்தியில் எழுதப்பட்டது ஞாபகம் இருக்கிறது. அச்சொட்டாக அவ்வாறே தேர்தல் ரத்தானது. இன்றுவரை தேர்தல் நடைபெறவில்லை. இதனை அரசியல் கட்சிகளும் மறந்தேவிட்டனர்.

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க, அனுர குமார திசநாயக்க, சஜித் பிரேமதாச ஆகியோர் போட்டியிடுவது ஓரளவுக்கு உறுதியாகியுள்ளது. மேலும் ஐந்தோ பத்துப்பேர் போட்டியிடக்கூடும்.

தாம் அமைச்சராக இருந்தபோது ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசினால் ராஜிவ் அரசுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தால் உருவான பதின்மூன்றாம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாதென ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக தெரிவித்துள்ளார். மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் இருக்குமென கூறிவரும் அவரது ஆட்சியிலேயே அந்த அதிகாரங்களை மத்திய அரசு பயன்படுத்தி தமிழர் பிரதேச காணிகளும் வழிபாட்டுக்குரிய நிலங்களும் அபகரிக்கப்படுகின்றன.

வடக்கில் ஆயிரம் விகாரைகள் கட்டுவேனென்று தெரிவித்த சஜித் பிரேமதாசவிடம் தமிழர் பிரச்சனைக்கான தீர்வுத் திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஜே.வி.பி. வேட்பாளர் அனுர குமார திசநாயக்க புனித கங்கையில் நீராடி புனிதமான மனிதராக காட்சி கொடுக்க முனைகிறார். தமிழர் வாக்குகளை இலக்கு வைத்து அண்மையில் வடக்கே சென்ற இவர் கிழக்குக்கும் செல்லப் போகிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக இம்மாத நடுப்பகுதியில் கனடாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பங்கேற்ற ரொறன்ரோ கூட்டத்தில் சுமார் இருநூறு வரையான தமிழர்களும் பங்குபற்றினர். இமாலய பிரகடனத்தினால் சிக்கலுக்குள்ளாகியிருக்கும் தமிழர் அமைப்பின் பிரதிநிதிகளும் இங்கே காணப்பட்டனர்.

அனுர குமார திசநாயக்க தமது தாய் மொழியான சிங்களத்தில் உரையாற்றினார். இதனை தமிழில் கேட்க அதற்கான செயலி வழங்கப்பட்டது. சில நிமிடங்களில் அது இயங்காமல் போயிற்று. "தமிழில் மொழிபெயர்ப்புத் தாருங்கள்" என தமிழர் ஒருவர் வேண்டினார். மேடையிலிருந்த பிரமுகர் ஒருவரிடமிருந்து "எலியட்ட தாண்ட" எனப் பதில் வந்தது. இதன் அர்த்தம் வெளியே போ என்பது.

தமிழர் பிரச்சனைத் தீர்வுக்கென உருவான பதின்மூன்றாம் திருத்தத்தை வெட்டித் தள்ளும் வேலையில் ரணில் முனைப்பாக உள்ளார். வடக்கில் ஆயிரம் விகாரைகள் கட்டும் தமது எண்ணத்தை நிறைவேற்ற சஜித் ஆவலுடன் காத்திருக்கிறார். அனுர குமாரவின் மொழிக் கொள்கை என்ன என்பதற்கு கனடாக் கூட்டத்தில் அளிக்கப்பட்ட பதில் போதும்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமானால், இவைகளுக்குப் பதிலளிப்பதற்கான ஒரே தீர்வு தமிழர் தரப்பிலிருந்து பொதுவேட்பாளர் ஒருவர் போட்டியிடுவதுதான் என்றால் தவறிருக்காது!

# ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் முன்மொழிவும் தமிழ்த் தலைவர்களின் முரண்பாடுகளும்!

கந்தையா அருந்தவபாலன்

எதிர்வரும் செப்ரம்பர் மாதத்தின் முற்பகுதியில் நடக்கக்கூடும் என பெரிதும் எதிர்பார்க்கப்படும் நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகத் தென்னிலங்கைக் கட்சிகள் தேர்தல் கூட்டுகள், பரப்புரைகள் என மும்முரமாகச் செயற்படத் தொடங்கியுள்ள இவ்வேளையில் இத்தேர்தலைத் தமிழ்மக்களின் எதிர்காலம் தொடர்பாகப் பயனுள்ள வகையில் எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாகத் தமிழ்த் தலைவர்களிடத்து தனித்தோ அன்றி அவர்களது கட்சி ரீதியாகவோ அன்றி கட்சிகளின் கூட்டு ரீதியாகவோ எவ்வித தீர்க்கமான முடிவும் இல்லை என்பதுடன் அவ்வாறான ஒரு முடிவை எடுக்க வேண்டுமென்ற உந்துதல்கூட அவர்களிடம் தென்படவில்லை என்பதை அத்தலைவர்கள் தெரிவித்து வரும் கருத்துகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் காலமிருக்கிறது என்பது அவர்களுக்கு ஒரு சாட்டுக் காரணியாக இருப்பினும் உண்மையில் அதற்கப்பால் அதற்கு வேறு பல காரணிகளும் உள்ளன. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகத் தமிழ்மக்களின் முன் மூன்று தெரிவுகள் காணப்படுகின்றன. ஒன்று, தமிழ்த் தரப்புகள் ஒன்றிணைந்து பொது வேட்பாளர் ஒருவரை தேர்தலில் முன்னிறுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் திரட்சியை ஒருமுகப்படுத்துவதும் அதன்மூலம் அம்மக்களின் கோரிக்கைகளை வலுவுள்ளதாக்குவதும். மற்றது வழமையாகப் பின்பற்றும் முறையான பிரதான சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு புரிந்துணர்வின் அடிப்படையில் தமிழ்மக்களின் வாக்குகளை வழங்குவது. அடுத்த தெரிவு தேர்தலில் வாக்களிக்காது புறக்கணிப்பது. தேர்தலைப் புறக்கணிப்பது என்பது ஆரோக்கியமான ஒரு முடிவாக அமையாது என்பதுடன் தலைவர்கள் மட்டுமன்றி பெரும்பாலான மக்களும் அதற்கு உடன்படும் நிலையிலில்லை. புறக்கணிப்பு என்பது ஒரு புள்ளியுயில் நிலைத்திருப்பது. ஆனால் மக்களுக்குத் இன்று தேவைப்படுவது முன்னோக்கிய அசைவியக்கமே. அதற்கு மேலாகப் விடுதலைப் புலிகளின் காலத்திலேயே புறக்கணிப்பு கிழக்கு மாகாணத்தில் அதிகளவிலும் வடக்கின் சில மாவட்டங்களில் குறிப்பிடத் தக்க அளவிலும் வெற்றி பெறவில்லை என்பதும் கவனத்திற்குரியது. (இது தொடர்பாக முன்னைய பத்தியொன்றில் தரவுகளுடன் விளக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது) இத்தெரிவை விடுத்தால் தமிழ்மக்கள் முன்னுள்ள தெரிவுகள் இரண்டு மட்டுமே. இவற்றுள் இம்முறை மக்களின் கரிசனைக்குரிய ஒரு தெரிவாக ‘தமிழர் தரப்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது’ முன்மொழியப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளும் இடம் பெற்று வருகின்றன. இதனைத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நிராகரிக்க வில்லையாயினும் இத்தெரிவு தொடர்பாக அத்தலைவர்கள் சரியான புரிந்துணர்வைக் கொண்டிருக்கிறார்களா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. பொது வேட்பாளர் தொடர்பாகச் சிவில் அமைப்புக்கள் மற்றும் புத்திஜீவிகள் கொண்டிருக்கும் அல்லது எதிர்பார்க்கும் கொள்கைக்கும் தலைவர்களின் கருத்துகளுக்குமிடையில் முரண்பாடுகள் காணப்படுவதுபோல் தெரிகிறது. அதுமட்டுமன்றி பொது வேட்பாளர் என்பது கட்சித் தலைவர்களின முன்னுரிமைக்கான தெரிவாக இருப்பது போலவும் தெரியவில்லை.

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தலைவர்கள் சிலர் தங்கள் கரிசனையை வெளிப்படுத்தியிருந்தாலும்கூட அது தொடர்பாக மக்கள் மத்தியில் கூடியளவு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ‘மக்களின் மனு’ என்ற வடக்கு கிழக்கு மாகாண சிவில் சமூகக் குழு அதிக அக்கறை காட்டி வருவதைக் காணமுடியும். அவ்வமைப்பு ஏலவே சில கருத்தாடல் நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தில் நடத்தியிருப்பதுடன் நாளை மட்டக்களப்பிலும் அவ்வாறான நிகழ்வொன்றை ஒழுங்கு செய்துள்ளதை அவதானிக்க முடிகிறது. இக்கருத்தாடல் நிகழ்வுகளில் பேராசிரியர்கள், அரசியல் ஆய்வாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள் என பலரும் தங்கள் கருத்துகளை முன்வைப்பதுடன் பங்குபற்றுனரிடையே ஆரோக்கியமான கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன. இக்கலந்துரையாடல்களில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் உட்பட அக்கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு அம்முன்மொழிவுக்கு சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வந்தாலும்கூட அதனை அடுத்த கட்டத்துக்கு முன்கொண்டு செல்வதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்வதாகத் தெரியவில்லை. குறிப்பாகத் தத்தமது கட்சி உறுப்புனர்களுடனோ அன்றி கூட்டுக்கட்சித் தலைவர்களுடனோ பயனுள்ள கலந்துரையாடல்களில் ஈடுபட்டதாகச் செய்திகளில்லை. அதேபோல அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டங்களை வகுத்ததாகவும் செய்திகளில்லை. உண்மையில் இவ்விடயத்தைப் பொறுத்து இன்றுவரை தலைவர்களும் வெறும் பார்வையாளர்களே.

ஒரு தேவையை நிறைவு செய்வதற்கு எம்முன் பல தெரிவுகள் இருந்தாலும் அவற்றுள் சிறந்ததொன்றைத் தெரிவுசெய்வதே அறிவார்ந்த செயல். அவ்வாறு தெரிவு செய்யப்படும் சிறந்த ஒன்றிலும்கூட சாதகமானவை மட்டுமன்றி பாதகமான விடயங்களும் இருக்கும். அதற்கு மேலாக தெரிவினை நடைமுறைப்படுத்தும் போது பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டியிருக்கும என்பதும் இயல்பானதே. இது தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவுக்கும் பொருந்தும். அதனால் எந்தவொரு முயற்சியும் எடுக்காமல் அது சரிப்பட்டுவராது என்ற முடிவுக்கு வருவது அறிவார்ந்த செயலாகாது.

> **பல்வேறு வழிகளிலும் திட்டமிட்டு மக்களைக் கருவறுக்கும் நிலையை முறியடிக்க வேண்டுமானால் சரியான அரசியல் தடத்தைத் தெரிவு செய்வது அவசியம். மக்களுக்கான அரசியலுக்காக அரசியல் தலைவர்களும் சமூகத்தலைவர்களும் ஒன்றுபடுவதன் மூலமே இது சாத்தியமாகும்.**

தமிழப் பொது வேட்பாளர் என்ற முன்மொழிவினூடாக தமிழ்மக்கள் எதிர்பார்க்கக்கூடிய அடைவுகள் எவை? மிக முக்கியமானதும் அவசியமானதுமான ஒன்று இதன்மூலம் தமிழ் மக்களின் ஒன்றுபட்ட திரட்சியை ஏற்படுத்த வழியேற்படும். இன்றைய தமிழ்மக்களுக்கு அடிப்படை அரசியல் தேவையாக இருப்பது பல்வேறு கோணங்களிலும் சிதறுண்டு போய்க்கிடக்கும் தமிழ்மக்களை அவர்களது அரசியல் இலக்கை நோக்கிய ஒரு புள்ளியில் குவியச் செய்வதாகும். பலம்தான் எதனையும் நிர்ணயிக்கும். ஜனநாயக சூழலொன்றில் ஒன்றுபடும் மக்களின் எண்ணிக்கைதான் பலமாக அமையும். சிதறுண்டு கிடப்பதன்மூலம் எதனையும் சாதிக்க முடியாது என்பதற்கப்பால் எதிர்த்தரப்புகள் மிகச் சுலபமாக தமக்கேற்ற வகையில் எம்மக்களைக் கையாள வழியேற்படும். அதனால் எமது இனம் மென்மேலும் பலவீனமடையும். இதனையே இன்று நாம் அனுபவிக்கிறோம். இன்றைய இந்த நிலைக்கு தமிழ்த் தலைவர்கள் அனைவருமே பொறுப்பாளிகள்தாம். அதிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் தமிழரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவும் தமிழ்மக்களின் அரசியல் பலத்தைப் பலவீனப்படுத்தியமைக்கு முக்கிய பொறுப்பாளிகள் என்பதில் இரு வேறு கருத்திருக்க முடியாது. இதில் கவலைக்குரிய விடயம் என்னவெனில் இந்நிலையிற்கூட தமிழ்த் தலைவர்கள் இதனை உணர்ந்து செயல்பட முன்வராதிருப்பது மட்டுமல்லாமல் தமக்கிடையே மேலும் பிரிவினையை வளர்ப்பதுடன் மக்களையும் மேலும் மேலும் கூறுபோட்டுக் கொண்டிருப்பதாகும். கடந்த காலத்தில் சமூகத் தலைவர்களால் கட்சிகளை ஒன்றுபடுத்த எடுத்த அத்தனை முயற்சிகளும் கானல் நீராகின. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் மக்களை மட்டுமன்றி தலைவர்களையும் மீண்டும் சரியானதொரு அரசியல் பாதையில் கொண்டுவருவதற்கு தமிழ்ப் பொது வேட்பாளர் முன்மொழிவு சரியானதொரு தெரிவாக அமையலாம்.

இதன்மூலம் தமது அரசியல் கோரிக்கைகளை வலுவடையச் செய்தல் மக்களுக்கான இன்னொரு அடைவாக அமையலாம். இன்று இந்தியா கவனிக்கவில்லை, ஐ.நா கவனிக்கவில்லை, சர்வதேச நாடுகள் கவனிக்கவில்லை என்று ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவை எம்மைக் கவனிப்பதற்கான நிலையை நாம் ஏற்படுத்தியுள்ளோமா? தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம் என்று ஓரணியில் ஒற்றுமையாக நிற்கிறோமா? அல்லது எங்கள் அரசியல் கோரிக்கை எதுவென எல்லோரும் ஒற்றைக் குரலில் கூறுகிறோமா? இல்லையே. எல்லோரும் இணைந்து கடிதம் ஒன்றை அனுப்புவதற்கே எவ்வளவு பிடுங்குப்பாடு? ஒற்றுமையாக ஒரு தீர்மானத்தை எடுக்கவும், எடுக்கப்பட்ட தீர்மானத்தினை ஏற்று அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்று திரளும் நிலையும் உருவாகுமானால் உலகத்தை நோக்கி ஒப்பாரி வைக்க வேண்டிய அவசியமேற்படாது. இதற்கு மிக அண்மைய எடுத்துக்காட்டு தேசிய மக்கள் சக்தி(ஜே.வி.பி) யை நோக்கி உலகத் தலைவர்கள் போவது. இந்த வகையில் தமிழ்ப் பொது வேட்பாளர் மூலம் மக்களை ஓரணியில் திரட்டுவதற்கப்பால் அவர்களின் அரசியல் கோரிக்கையையையும் ஒரே குரலில் முன்வைக்க வழியேற்படும். தமது கோரிக்கையை உரத்த குரலில் வெளிப்படுத்துவதற்கான ஒரு பொதுவாக்கெடுப்பாக இதனைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். அத்துடன் எதிர்காலத்தில் மக்களின் அனைத்து அரசியல் செயல்பாடுகளும் ஒரே திசையில் பயணிப்பதுடன் மேற்கொள்ளப்படும் மக்கள் போராட்டங்களும் வலுப்பெற்றவையாக மாறும். இதனால் இப்போது பெயரளவில் ஒவ்வொருவராலும் உச்சரிக்கப்படும் தமிழ்த் தேசியம் உண்மையான வடிவத்தைப் பெறக்கூடும்.இவையே தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாக சிவில் அமைப்புகளதும் அறிஞர்களதும் எதிர்பார்ப்பாக இருந்தாலும் இது தொடர்பாக அரசியல் தலைவர்களது எண்ணமும் எதிர்பார்ப்புகளும் வேறாக இருப்பது போலத் தெரிகிறது. இதனைத் தூரநோக்கில் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை வலுப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாகக் கருதாது குறுகிய நோக்கில் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேரம் பேசுவதற்கான ஒரு கோசமாக அரசியல் கட்சித் தலைவர்கள் கையாள விரும்புவது போலத் தெரிகிறது.

தமிழ்ப் பொது வேட்பாளர் முன்மொழிவைத் தொடக்கத்திலேயே தமிழரசுக் கட்சியின் சில தலைவர்கள் நிராகரித்திருந்தாலும் அது அக்கட்சியின் உத்தியோகபூர்வமான முடிவாக இருக்கவில்லை. தற்போது உத்தியோக பூர்வமாக முடிவை அறிவிக்கும் நிலையிலும் அக்கட்சி இல்லை என்றாலும் அக்கட்சியின் தலைவராகத் தெரிவான சிறிதரன் அண்மையில் ஒரு கூட்டத்தில் கருத்துரைக்கும்போது “ ஜனாதிபதி வேட்பாளர்கள் இனப்பிரச்னைக்கான தங்களது தீர்வை முன்வைக்க வேண்டும்.இல்லையெனில் நாம் தமிழ் வேடபாளர் ஒருவரை நிறுத்தவேண்டி வரும்” என்று கூறியிருந்தார். இதேபோல ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்ணியின் பேச்சாளருமாகிய சுரேஷ் பிரேமசந்திரன் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தேசிய மாநாட்டில் உரையாற்றும் போது “ ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படும்போது அவருடைய நோக்கம் உட்பட தென்னிலங்கைத் தலைவர்களுடன் பேரம் பேசுவதற்கான நிபந்தனை வரைபு ஒன்று தயாரிக்கப்படவுள்ளது” என்று குறிப்பிட்டிருந்தார். இதே மாநாட்டில் பேசிய செல்வம் அடைக்கலநாதன் தமிழ்ப் பொது வேட்பாளர் பற்றிக் குறிப்பிடுகையில் அதனை எச்சரிக்கையுடன் அணுகவேண்டும் என்ற பொருள்படப் பேசியிருந்தார். இவர்களுடைய கருத்துகளிலிருந்து தமிழ் வேட்பாளர் தொடர்பாக நாம் இரண்டு முடிவுகளுக்கு வரமுடியும். ஒன்று இவர்களின் முதன்மைத் தெரிவாக தமிழ்ப் பொது வேட்பாளர் இல்லை என்பது. இரண்டாவது வரும் ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கைத் தலவர்களுடன் பேரம்பேசுவதற்கான ஒரு கோசமாக இதனைக் கையாள விரும்புகிறார்கள் என்பது. ஆனால் இது தொடர்பான கருத்தாடல்களில் சிவில் அமைப்புகளும் புத்திசீவிகளும் வலியுறுத்திக் கூறிய ஒரு விடயம் இதனை வரும் தேர்தலில் பேரம்பேசுவதற்கான ஒரு கருவியாகக் கையாளக் கூடாது என்பதாகும்.

பிரதான ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு வழங்குவதன்மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற முயற்சிப்பது தவறான ஒரு தெரிவாக அமையாது. ஆனால் கடந்த காலத்தில் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் மூலமும் எழுதப்படாத புரிந்துணர்வுகள் மூலமும் தமிழ் மக்களுக்கு அரசியல் தலைவர்களால் ஏதேனும் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளதா? மைத்திரிக்கு தமிழ்மக்களின் வாக்குகளை அள்ளிக் கொடுத்தது மட்டமல்லாமல் மனதால் ஒன்றுபட்டு எதிர்க்கட்சி என்ற பெயரில் ஆளுங்கட்சியாகவே இருந்து ஆதரவு வழங்கியும் எம்மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தது ஒன்றுமில்லை. நல்லாட்சியில் தீர்வைப் பெற்றுத்தராவிட்டால் நான் அரசியலிலிருந்து விலகுவேன் என்று கூறிய சுமந்திரன் இன்று தனது கட்சி அதிகாரத்துக்காக கச்சை கட்டி நிற்கிறார். உரிமைகள் வழங்காவிட்டால் உண்ணாவிரதமிருந்து உயிர் மாய்க்கப் போவதாகப் பலமுறை கூறிய செல்வம் அடைக்கலநாதன் வன்னியில் கரும்புத் தோட்டத்துக்கு காணி கேட்பதாக ரணில் கூறுகிறார். தென்னிலங்கை சிங்கள வேட்பாளருக்கு தமிழ் வாக்குகளை அள்ளிக் கொடுத்ததன் மூலம் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கா விட்டாலும் சில தலைவர்களுக்கு நிறையவே கிடைத்தது என்பதுதான் யதார்த்தம்.சரத் பொன்சேகாவுக்கும், மைத்திரிக்கும் ஆதரவு வழங்குவதற்காக தேர்தல் செலவாக அவர்களிடமிருந்து பல கோடிகளைப் பெற்று ஒருசில கோடிகளை மட்டும் செலவு செய்து மிகுதியைத் தலைவர்கள தங்கள் தங்கள் பைகளில் போட்டது எல்லாம் ஊரறியும். தலைவர்களின் தமிழ்த் தேசியத்துக்கான தியாக அரசியல் பற்றி மக்கள் அறிந்தது கடுகளவு. அறியாதது மலையளவு. மீண்டும் அவற்றை நோக்கி தலைவர்கள் செல்லக்கூடாது என்பதே அவர்களைத் தெரிவு செய்த மக்களின் எதிர்பார்ப்பு.

வரலாறு எமக்கு வழிகாட்டியாக அமையவேண்டும். மீண்டும் மீண்டும் ஒரே தவறைச் செய்வதிலிருந்து நாம் விடுபடவேண்டும். நிலம், மொழி, மதம், பண்பாடு, பாரம்பரியம், பொருளாதாரம், சட்டம் எனப் பல்வேறு வழிகளிலும் திட்டமிட்டு மக்களைக் கருவறுக்கும் நிலையை முறியடிக்க வேண்டுமானால் சரியான அரசியல் தடத்தைத் தெரிவு செய்வது அவசியம். மக்களுக்கான அரசியலுக்காக அரசியல் தலைவர்களும் சமூகத் தலைவர்களும் ஒன்றுபடுவதன் மூலமே இது சாத்தியமாகும். ●

# எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வது எப்படி?



செல்வின்

பலதேசிய இனங்களின் தாய்நாடான இலங்கைத் தீவில் கடந்த எட்டு தசாப்தங்களாக உரையாடப் பட்டும் தேடப்பட்டும் ஒப்பந்தங்களாலும் வாக்குறுதி களினாலும் முன்னெடுக்கப்பட்டுவந்த இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்கான நிலைபேறான அரசியல் தீர்வு என்பது தேவையற்றதொன்றாக 209 மே மாதத்தில் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டு இராணுவபலத் தினால் பெறப்பட்ட மேலாதிக்க நிலையினை தமது வெற்றியாக கருதி சிங்கள பௌத்த தேசியவாத அரசியல் தலைவர்கள் வெளிப்படையாகவே உரைக்கத் தொடங் கிவிட்டனர்.

இந்தச் சிந்தனை அலை விதிவிலக்கில்லாமல் அனைத்து சிங்கள அரசியல் தலைமைகளிடமும் அவர்களின் கட்சி களிடமும் ஆழவேரூன்றியுள்ளது. இத்தகைய சிந்தனை மாற்றம் காரணமாக அவர்கள் கடந்த காலத்தில் தமிழர் தரப்புடன்முன்னெடுத்த அதிகாரப் பகிர்வினூடாக அர்த்தபுஷ்டியுள்ள அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் தொடர்பாக அவர்கள் கொண்டிருந்த நேர்மைத்தன்மை யினையும் சந்தேகத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

1948இலிருந்து சுதந்திரத்திற்கு பின்னான காலங்க ளில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களத் தலைவர்கள் தாங்கள் கடந்த காலத்தில் இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக தமிழர் தரப்புடன் முன் னெடுத்த அனைத்து முன்னெடுப்புகளையும் மறந்து போனவர்களாகவும் தமிழ்மக்களின் அரசியல் பேரம் பேசும் ஆற்றலை இராணுவ மேலாதிக்கம் கொண்டும் தங்கள் அரசுகள் காலத்திற்கு காலம் உருவாக்கிய அரசி யலமைப்பு மாற்றங்கள், சட்டங்கள், அமைச்சரைவைத் தீர்மானங்கள், வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகடனங் கள், திணைக்களச்சுற்றறிக்கைகள் மற்றும் பிரமாணங்க ளின் கீழும் ஒடுக்கிய பின்பு தற்போது தேசிய இனப்பிரச் சனை என்ற ஒரு விடயம் காலாவதியானதும் முக்கியத் துவம் அற்றதானதாகவும் பேசத்தொடங்கியுள்ளனர். அத்துடன் தமிழர்களை ஒடுக்கிய பின்பு தற்போது ஏனைய தேசிய இனங்களான முஸ்லீம்கள் மற்றும் மலை யகத் தமிழர்கள் ஆகியோரின் உரிமைகளும் பாதுகாப் பும் வாழ்வாதாரங்களும் கூட நெருக்கடியான நிலைமை க்குள் தள்ளப்பட்டு வருவது வெளிப்படையாகவுள்ளது.

அதேவேளையில் பூகோள அரசியல் சமனிலையில் ஏற்பட்டுள்ள அதிகாரச் சமனிலையின்மையும் பிராந்திய வல்லரசுகளின் போட்டித்தன்மையான நலன் சார் கூட் டுக்களும் கூட நாடுகளை ஆட்சிசெய்யும் அல்லது ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானிக்கும் வல்லமை கொண்ட இனவாத அரசுகளைப் பாதுகாப்பதிலும் அவ் அரசுகளி னால் முன்னெடுக்கப்படும் இன ஒதுக்கல் அல்லது இன வழிப்பு செயற்பாடுகள் உட்பட அனைத்து போர்க்குற் றங்கள் மற்றும் மனுக்குலத்திற்கு எதிரான குற்றங்களிலி ருந்து அவற்றைப் பாதுகாப்பதிலுமே அக்கறை கொண் டுள்ளன.

மறுபக்கத்தில் 2009ற்குப் பின்னரான ஈழத்தமிழ்மக்க ளின் அரசியல் செல்நெறி திக்குத்தெரியாத காட்டில் அகப்பட்ட மனிதனின் நிலையாக மாற்றமடைந்துள்ளது. ஒலிகள் வரும் திசையெல்லாம் மாறி மாறி பின்தொடர்ந்து அலைவது போல் வேறுபட்ட பல நோக்கங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களைக் கொண்ட தரப்புகளின் இழுவிசைக் கும் உந்துவிசைக்கும் இடையே சிக்கவைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய குழப்பமும் நம்பிக்கையீனங்களும் முரண் பட்ட நலன்களைக் கொண்டவர்களின் தலையீடுகளும் பெருகியுள்ள சூழ்நிலையில் ஈழத் தமிழ்ச் சமூகத்திற்கு ஒரு தெளிவான சுய மதிப்பீடும் காலம், தேசம், அரசியல் சூழல், விழுமியங்கள் ஆகியவற்றின் மாற்றங்கங்களைக் கவனத்திற்கொண்ட அணுகுமுறையின் தேடலும் மிக வும் அவசியமாகவுள்ளது.

உலகத்தின் மனச்சாட்சியின் முன் நீதியும் பாதுகாப் பும் தன்னாட்சி உரிமைக்கான அங்கீகாரமும் கேட்டு நிற்கின்ற ஈழத்தமிழ்ச் சமூகம் அகத்தி அகத்திலும் புலத் திலும் தன்னுடைய அபிலாசைகளையும் கோரிக்கைக ளையும் உறுதியாகவும் தெளிவாகவும் அறிவு பூர்வமாக வும் தர்க்கரீதியாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் பொத்தமானதுமான வழிமுறைகள் ஊடாக முன்னிறுத் துவது காலத்தின் கட்டாயமாகவும் இலங்கைத் தீவில் வாழும் ஈழத் தமிழ் மக்களின் நிகழ்கால பாதுகாப்பிற் கும் எதிர்கால சந்ததியினரின் நிலைபேறான இருப்பிற் கும் வெழுமைக்கும் அவசியமாகவும் உள்ளது.

இலங்கைத் தீவின் ஓரின பெரும்பான்மை மேலாதிக் கத்தினால் கட்டமைக்கப்படுகின்ற அரசுகளின் சித்தாந் தங்கள் கூட தேர்தல் வெற்றிகளுக்காகவும் தங்களது குறுகின அரசியல் இலாபங்களுக்காகவும் குறுகின தேசி யவாதமாக மாற்றப்பட்டுள்ளது. இவ்வரசுகளினாலும் இதன் நிறுவனங்களினாலும் முறைசார அமைப்புகளினா லும் விதைக்கப்படும் இந்த ஆபத்தான ஓரின சித்தாந்தம் ஈழத்தமிழ் தேசிய இனத்தை மட்டுமன்றி முஸ்லீம் தேசிய இனத்தையும் மலையகத் தமிழ்தேசிய இனத்தையும் கூட இல்லாதெழிக்கின்ற நிகழ்ச்சி நிரலை விரைவுபடுத்த ஊக்குவித்துள்ளது.

இந்த விடயம் ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமை யாக நாங்கள் குறுக்கிப் பார்ப்பது கூட மிகவும் ஆபத்தா னது. ஈழத்தமிழருக்கான அதிகாரப்பகிர்வுக்கு ஏதோ ஒருவகையான தீர்வைக் கண்டறிந்தாலும் அதற்குப்பின் முஸ்லீம் தேசியஇனமக்களும் மலையக தேசியஇனமும் கூட தனக்கு மேல் நிகழ்த்தப்படும் இன ஒதுக்குமுறைக்கு எதிராக போராட வேண்டிவரும். அப்போது மீண்டும் தொடர்ச்சியான அரசியல் போராட்டங்களும் வன்மு றைகளும் இத் தீவினை அமைதியற்ற நிலைமைக்குள் இட்டுச்செல்லும். எனவே அத்தகைய நிலைமைகளைச் சீர்தூக்கிப்பார்த்து சகல ஏனைய தேசிய இனங்களுக்குமு ரிய தன்னாட்சி உரிமைகளும் பாதுகாப்பும் உறுதிசெய் யப்படுவதற்கான அரசியல் முறைமையினை இலங்கைத் தீவில் கட்டியெழுப்புவதற்கு ஏதுவான நிலைபேறான தும் தேசிய இனங்கள் அனைத்தினதும் அடையாளங்க ளையும் தனித்துவங்களையும் அங்கீகரிக்கக்கூடியதுமான நியமங்களுடன் உடன்பாடுகள் ஊடாக கட்டியெழுப்பு வதற்கான மக்கள் ஆணையினைக் கோரும் சந்தர்ப்பமாக இந்த சனாதிபதி தேர்தலினை ஏனைய தேசிய இனங்கள் ஒன்றிணைந்து பயன்படுத் தவேண்டும்.

**“இலங்கையின் முதன்மையான பிரச்சனையாக தேசிய இனப்பிரச்சனை முன்னிறுத்தப்பட்டு அதற்கு உடனடியாக தீர்வுகாணப்படவேண்டும்” என்ற தீர்மானத்தினை முன்னிறுத்தி ஒரு பொது வேட்பாளரினை ஏனைய தேசிய இனங்கள் சார்பாக ஜனாதிபதி தேர்தலில் பங்குபற்றவேண்டும்.**

இந்த ஒன்றுபட்ட குறிக்கோள்களுக்காக ஏனைய தேசிய இனங்களான ஈழத்தமிழ்ச்சமூகம் முஸ்லீம் சமூ கம் மலையகச் சமூகம் ஆகியவற்றின் அரசியல், சமய மற்றும் சமூகத் தலைவர்கள் புத்திசீவிகள் சமூகச் செயல் பாட்டாளர்கள் மத்தியில் இவ்விடயம் பேசுபொருளாக் கப்பட்டு விரைந்து உரையாடப்பட்டு ஒரு சாத்தியமான பொதுநிலைக்கு உடன்படவேண்டும்.

சுமகாலத்தில் அனைத்து மக்களின் வாக்குகளையும் இவ் மக்கள் ஆணைக்காக ஒன்றுதிரட்டக்கூடிய ஒருவர் பொது வேட்பாளராக எதிர்வரும் சனாதிபதி தேர்தலில் நிறுத்தப்படவேண்டும்.

19ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலிருந்தே சிங்கள் பௌத்த மேலாண்மைச் சித்தாந்தம் தனியே ஈழத்தமிழ ருக்கு எதிராக ஒடுக்குமுறையில் ஈடுபடவில்லை. 1915இல் கண்டியில் ஏற்பட்ட சிங்கள -முஸ்லீம் கலவரமும் 1927இல் டொனமூர் ஆணைக்குழு முன் டி.எஸ்.சென நாயக்கா, எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்கா, டபிள்யு.டபிள்யூ. கன்னங்கரா ஆகிகோரால் முன்வைக் கப்பட்ட மலையக தோட்டதமிழ்மக்களுக்கு வாக்குரிமை கொடுக்க்கூடாது என்ற கருத்தியல் வாதமும் 1948இல் மலையக தமிழ்மக்களின் வாக்குரிமை பறிப்பும், 1949இல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்திய-பாகிஸ்தானிய குடியி ருப்பாளர் சட்டத்தின் கீழ் பெருமளவு தோட்டத் தொழி லாளர்களை இந்தியாவுக்கு நாடற்றவர்களாக திருப்பி அனுப்பியதன் மூலம் கண்டியராச்சியத்தில் தமிழ்பேசும் மக்கள் கொண்டிருந்த சனநாயக அரசியல் பலத்தை தகர்த்தது என முஸ்லீம்கள், மலயகம் வாழ் தென்னிந்திய தமிழர்கள் ஆகிய தேசிய இனங்களுக்கெதிராகவும் 1900களின் ஆரம்பத்திலிருந்தே முன்னெடுக்கப்பட்டு வந்த சிங்கள பௌத்த தேசிய இனத்திற்கு புறம்பான ஏனைய தேசிய இனங்களின் மீதான இன ஒடுக்குமுறை இன்றும் தொடர்கின்றது.

பெருந்தோட்டங்களில் வாழும் மலையக தமிழர்க ளுக்கு குடியிருப்பதற்கான காணிகளை வழங்குவதில் இன்னமும் கபடத்தனமான செயற்பாடுகளை முன்னெ டுப்பதும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பெயராலும் ஏனைய காரணங்களாலும் முஸ்லீம் தேசிய இனத்தின் மீதும் இன ஒடுக்கு முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள் ளது. முஸ்லீம் அரசியல் வாதிகள் காலத்திற்கு காலம் ஆளும் கட்சிகளுடன் ஒட்டி உறவாடி மந்திரிப் பதவிக ளைப் பெற்று முஸ்லீம் மக்களுக்கு நன்மைகளை செய்தி ருந்தாலும் அவை வெறும் தற்காலிக நன்மைகளாக மாற்றப்பட்டுள்ளதோடு இலங்கைத் தீவில் முஸ்லீம் என்ற தேசிய இனத்தின் அரசியல் இருப்பு என்பது விழிம்புநிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஈழத்தமிழ் மக்களின் சனநாயக அரசியல் பலமும் தேசியஇனம் என்ற அடையாளமும் அவர்களது அரசி யல் பலத்தையும் தன்னாட்சி உரிமையினையினையும் அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த வடக்கு கிழக்கு தாயகத்தில் தக்கவைக்கமுடியாக அளவுக்கு போருக்கு பிந்திய காலத்தில் முன்னெடுக்கப்படும் நிறுவனரீதியாக வும் சட்டங்களுக்கு புறம்பான சக்திகள் ஊடாகவும் முன்னெடுக்கப்படும் கட்டமைக்கப்பட்ட வன்செயல் கள் (structural Violence) தொடர்ச்சியாகவும் தளர்வற்ற முறையிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவைகளை தடுத்து நிறுத்துவதற்கான எந்தவிதமான ஆக்கபூர்வமான முயற்சிகளையும் எடுக்கத்தவறியுள்ள ஆட்சியாளர்கள் போருக்குப் பின்னரான சூழ்நிலையில் வடக்கு கிழக்கிற்கென முனவைக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களையும் கூட பலவிதமான காரணங்களை உருவாக்கி தாமதிப்பதிலும் தடைபோடுவதிலும் மிகவும் கவனமாக செயற்படுகின்றனர்.

சம காலத்தில் தற்போது இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப்பிரச்சனையினை தீர்ப்பதற்கான முன்னு ரிமையினை கொண்டிருப்பதன் ஊடாக தீவின் சகல பிரச்சனைகளுக்குமான சர்வரோக நிவாரணியாக பொரு ளாதார பிரச்சனையினை சர்வதேசத்தின் முன் நிலை நிறுத்துவதில் ஓரளவிற்கு வெற்றிகண்டுள்ளனர்.

மறுவகையில் ஏனைய தேசிய இனங்களின் அரசியல் இறைமைக்கும் தன்னாட்சி உரிமைக்கும் சனநாயகப் பலத்திற்கும் அரசியல் பொருளாதாரத்திற்கும் சவாலான தந்தியோரபாய முயற்சிகளை முடுக்கிவிட்டு அந்த தேசிய இனங்களின் அரசியல் கோரிக்கைகளையெல்லாம் முக் கியத்துவம் அற்றவைகளாகவும் அவசரமற்ற தெரிவுகளா கவும் தற்போதைய ஆட்சியாளருடன் இணைந்து ஏனைய சிங்களபௌத்த தேசிய வாத சக்திகள் முன்னெடுத்துள்ளன.

2024 சிறீலங்காவின் சனாதிபதித் தேர்தலில்நடை பெறப் போவது யாது?

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சனைகளை மட்டும் முதன்மை யான விடயமாக்கி அதனை வெறிறிகரமாக கையாளக் கூடிய ஒருவரினை சனாதிபதியாக தெரிவு செய்வதற் கான உரையாடல்கள் சிங்கள அரசியல் சமூகத்திடம் முனைப்படைந்துள்ளது. இதனடிப்படையில் எதிர் காலத்தில் சனாதிபதியாக தெரிவுசெயயப்படுபவர் தனக்கு மக்களால் வழங்கப்பட்ட மக்களை ஆணை என் பது பொருளாதார பிரச்சனைகளை கையாளுவதற்கே என்று பிரகடனப்படுத்திக்கொண்டு அதனடிப்படையில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணும் அனைத்து முயற்சிகளிலிருந்தும் அதற்கான பொறுப்புக் களிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொள்வார்.

அவ்வாறு அல்லாமல் சனாதிபதியாக வருபவர் தன் முனைப்புடன் தேசிய இனப்பிரச்சினைக்கு ஏதாவது தீர்வு முயற்சிகளை முன்னெடுத்தால் ஏனைய சிங்கள பௌத்த தேசியவாத சக்திகள் ஒருங்கிணைந்து அவருக்கு அத்தகைய ஆணையினை மக்கள் வழங்கவில்லை என பிரகடனப்படுத்தி அவரது முயற்சிகளை முடக்குவர்.

இதுவே எதிர்காலத்தில் நடக்கப்போவதாக உள்ளது. இதனை சிங்கள பௌத்த தேசியவாதத்தின் ஒடுக்கு முறைக்கு கீழ் சிக்கவைக்கப்பட்டுள்ள அனைத்து ஏனைய தேசிய இனங்களும் ஒருமித்து கையாளுவது எப்படி என்பதனைக் கண்டறிய வேண்டும். அதேவேளையில் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் பொருளாதார பிரச்சனைகளை தீர்ப்பதற்காக நாட்டினை முன்னகர்த்தும் அதேவேளை ஏனைய தேசிய இனங்க ளுக்கு குறைந்த இழப்புகளை குறைந்தளவில் அனுமதிக் கக்கூடிய பொருத்தமான வேட்பாளரை சனாதிபதியாக தெரிவுசெய்யும் சனநாயக கடமையினையும் ஆற்றுவதற் கான வழிமுறையினை கண்டறியவேண்டும்.

இலங்கையின் சனாதிபதிக்கான தேர்தல் முறையில் விருப்பு வாக்கு முறையும் வேண்டிய 50வீத வாக்குகளை ஒரு வேட்பாளர் பெறாத நிலைமையில் ஏனைய வேட் பாளர்களுக்கு விழுந்த இரண்டாவது வாக்குகளை எண் ணும் முறையும் உள்ளது. இது மிகவும் சாதகமானவிட யமாக இம்முறை கையாளப்படவேண்டும்.

“இலங்கையின் முதன்மையான பிரச்சனையாக தேசியஇனப்பிரச்சனை முன்னிறுத்தப்பட்டு அதற்கு உடனடியாக தீர்வுகாணப்படவேண்டும்” என்ற தீர்மா னத்தினை முன்னிறுத்தி ஒரு பொது வேட்பாளரினை ஏனைய தேசிய இனங்கள் சார்பாக சனாதிபதி தேர்தலில் பங்குபற்றவேண்டும். இதன் ஊடாக சர்வதேச சமூகத் திற்கு மிகவும் வலுவான செய்தியொன்றை ஏனைய

(14ம் பக்கம் பார்க்க)

# கிறிஸ்துவின் உயிர்ப்பின் மகிழ்வு அனைவருக்கும் சொந்தம்

**அருட்பணி ஜீவா போல் அ.ம.தி**

காலா காலாமாகக் காத்திருந்த கடவுள் கன்னிமரியா வயிற்றில் கருவாக உருவானர். யோசேப்பு, மரியாவின் மகனாகப் பெத்லேகேமில் பிறந்தவருக்கு வானதுாதர் கூறிய படியே இயேசு என்று பெயரிட்டனர். இயேசு என்றால் மீட்பர் என்று பொருள் பெறும். இயேசு தன் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து ஞானத்திலும், உடல்வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார். தமது முப்பதாவது வயதில் திருமுழுக்கு யோவான் கையால் திருமுழுக்குப் பெற்றவர். துாய ஆவியால் அருட்பொழிவு நிறைந்தவராய் இறையாட்சியை பறைசாற்றினார். அரும் பெரும் புதுமைகள் செய்து தம்மை நம்பினோர் நிலைவாழ்வு பெற்று கடவுளின் பிள்ளைகளாவர் என்று நற்செய்தி நவின்றார்.

அவரை ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள் குறிப்பாக யுதசமயத்தலைவர்களும், சில பரிசேயர்களும், சட்டவல்லுனர்களும், சதுசேயர்களும் மக்கள் மனங்களைத் தம் வசப்படுத்தி உரோமர் ஆட்சியாளராக இருந்த பிலாத்துவின் தீர்ப்புக்கு கையளித்து சித்திரவதைக்கு உட்பட்டுத்தி சிலுவையில் அறைந்து அவரைக் கொன்றார்கள்.

இயேசு மூன்றாம் நாள் சாவை வென்ற சத்தியனாக உயிர்த்தெழுந்தார். “கிறிஸ்து உயிருடன் எழுப்பபடவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்” (1 கொரிந்தியர் 15:14) என புனித பவுல் கூறுகிறார்.





**கிறிஸ்துவின் உயிர்ப்பில் நம்பிக்கை கொள்வோர் யார்?**

கிறிஸ்து சாவை வென்று உயிர்த்தெழுந்தார் என்ற உயிர்ப்பின் தரிசனங்களை நற்செய்திகளில் நோக்குமிடத்து அவர் வாழும் போது அவரது போதனைகளைக்கு செவிமடுத்து அவரது சீடராக விளங்கியவர்களே அவரது உயிர்ப்பின் தரிசினங்களைக் கண்டு, அனுபவித்து நம்பி, அதற்கு சான்று பகர்ந்தனர். அவர்கள் தங்கள் வாழ்வை கிறிஸ்துவுக்காக அர்ப்பணிந்து உயிரையும் தியாகம் செய்து மறை சாட்சியராய் மரிப்பதில் தீவிரம் கொண்டனர்.

உயிர்ப்பின் அனுபவத்தைச் சுவைத்தவர்களுள் மகதலா மரியா ஒரு சிறப்பிடத்தை வகிக்கிறார். அவளைப் பிடித்திருந்த ஏழு பேய்கள் துரத்தப்பட்ட நிலையில் இயேசுவின் போதனைகளால் கவரப்பட்டு அவரது அன்புச்சீடராக மாறியவர். இவர் இயேசுவின் உடலைத் தரிசிக்கத் தேடி கல்லறைக்குச் சென்ற போது உயிர்த்த இயேசுவின் தரிசனம் பெற்றார். அவரைப் பற்றிக் கொண்டாள், உரையாடினாள், உளம் மகிழ்ந்தாள். உயிர்ப்பின் மகிழ்ச்சி அனுபவத்தை பகிர்ந்து கொள்ள முதன்மைச் சீடர்களை நோக்கி விரைந்தாள்.

கல்லறையைக் கடந்த இறைமகன் இயேசு உலகில் வாழும் மாந்தர் யாவருக்கும் சொந்தம். எனவே இன, மத, மொழி பாகுபாடுகள் கடந்து எந்த மனிதரும் அவரது போதனைக்கு திறந்த மனத்தோடு செவிமடுத்து, அவரோடு அன்புறவில் இணையும் போது உயிர்த்த இயேசு கிறிஸ்துவின் மகிழ்வு அனைவருக்கும் சொந்தமாகிறது.

---




**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**எம். அகிலேஸ்வரன்
சித்தன்கேணி.**

**கேள்வி:** கடந்த 2016ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூரகல விகாரை தொடர்பில் முஸ்லிம் மதத்தை இழிவு படுத்தும் வகையில் வெளியிட்ட கருத்து, தேசிய மற்றும் மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவித்ததாக தொடரப்பட்ட வழக்கில், கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதே. இது எதைக்காட்டுகின்றது.

**வியுக்தியார்:** இதில் காட்டுவதற்கு என்ன இருக்கின்றது?. மதங்களை இழிவுபடுத்தி இதுவரை இந்த நாட்டில் எத்தனை பேர் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிகம் ஏன், அண்மையில்கூட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்கூட மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் கருத்துச் சொன்னாரே. இப்போது ஞானசாரர் மீது மட்டும் வழக்கு போடப்பட்டு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றால், அதற்கு பின்னால் என்ன காரணங்கள் இருக்கின்றன என்பது அந்தப் புத்தருக்குத்தான் வெளிச்சம்.

---

**சபா. சிவநாதன்,
குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** உக்ரைனில் நடந்து வரும் மோதலுக்கு மத்தியில், அங்கு இலங்கையை சேர்ந்தவர்கள் ஆயுதம் ஏந்தி மோதலில் ஈடுபட்டு வருவதாக அல் - ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளதே. உக்ரைனில் மட்டுமல்லாது இரு தரப்பிலும் இலங்கையர்கள் செயற்பட்டு வருகின்றனராம். இதுகுறித்து கருத்துச் சொன்ன ராணுவப் பேச்சாளர், இலங்கை இராணுவத்தில் விடுப்பு எடுத்துக்கொண்டு அப்படியாரும் அங்கு போரிடவில்லை என்று கூறியுள்ளாரே?

**வியுக்தியார்:** ராணுவப் பேச்சாளர், ராணுவத்தில் இருந்து விடுப்பு எடுத்துக்கொண்டு அங்கு போய் யாரும் போரிடவில்லை என்றுதான் கூறியிருக்கிறாரே தவிர, இலங்கையர் யாரும் போரிடவில்லை என்று கூறவில்லையே. ஓய்வுபெற்ற ராணுவத்தினர்தான் இப்படி இரண்டு நாட்டு படைகளிலும் பணியாற்றுகின்றனராம். அவர்கள் பணியாற்றுவதால், நமக்கு அன்னியச் செலாவணியாவது கிடைக்கிறது என்று நீங்கள் சந்தோசப்படவேண்டியதுதான். படையிலிருந்து விடுப்பு எடுத்துச் சென்றாலும் நாம் சந்தோசப்படத்தானே வேண்டும். நமது நாடு இன்று பொருளாதார நெருக்கடியில் இருப்பதற்கு அளவுக்கதிகமான படையினரை வைத்து தீனி போடுவதும் ஒரு காரணம் தானே.

**எம். கௌதம்,
அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** ஈழத் தமிழர்களுக்கு தாயகமாக தமிழீழத்தை அமைப்பது குறித்து ஐ. நா. மூலம் உலகம் முழுவதும் வாழும் ஈழத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்த இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழகத்தின் பாட்டாளி மக்கள் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தியிருக்கின்றதே. இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**வியுக்தியார்:** இதுபற்றி நினைப்பதற்கு என்ன இருக்கின்றது. தமிழ் ஈழத்திற்கு ஆதரவாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டால் தமக்கு வாக்குகள் கிடைக்கும் என்று பாட்டாளி மக்கள் கட்சி இப்போதும் நம்புகின்றது என்றால் அதை நினைத்து நாம் சந்தோசப்படலாம் தானே. இன்னமும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக தமிழ் நாட்டில் மக்கள் இருக்கிறார்கள் என்றால் அது நமக்கு சந்தோசமானதுதானே.

---

**கந்தையா முகுந்தன்
சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** பொதுஜன பெரமுனவில் தற்போது வரை நான்கு அல்லது ஐந்து ஜனாதிபதி வேட்பாளர்கள் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** நாமல் ராஜபக்ஷ, யோசித ராஜபக்ஷ, ரோஹித ராஜபக்ஷ, சசீந்திர ராஜபக்ஷ என்று நான்கு பேர் இருப்பது தெரியும். ஐந்தாவதாக சாமல் ராஜபக்ஷவைச் சொல்கிறாரா அல்லது தனது தாயைச் சொல்கிறாரா என்று தெரியவில்லையே.

---

**இரா. ஜெயருபன், பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள விடயங்களை கண்டுபிடிப்பதற்கு முக்கிய தடையாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே காணப்படுகின்றார் என்று கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்ணான்டோ தெரிவித்துள்ளாரே. அவர் இப்போதும் அதிகாரத்தில் இருக்கிறாரா?

**வியுக்தியார்:** அதை நமது அருட்தந்தை சிறில் அடிகளாரிடம்தான் கேட்கவேண்டும். இப்போதெல்லாம் எதைவேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் சொல்லலாம் என்றாகிவிட்டதே. நம்மவர்கள் இந்தியாவிடம் பெட்டி வாங்கினார்கள், ரணிலிடம் பெட்டி வாங்கினார்கள் என்று ஏதாவது ஆதாரத்துடனா கதைக்கிறார்கள். எல்லாம் ஒரு கற்பனை தானே?. அதுபோலத்தான் அருட்தந்தையரும் சொல்கிறாரோ தெரியவில்லையே.

**எஸ். செந்துஜன், ராசவீதி, கோப்பாய்.**


---

**கேள்வி:** தேசிய மக்கள் சக்தி மீதான மக்களின் விருப்பு தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது என்று கருத்துக் கணிப்புகள் கூறுகின்றனவாமே. சுகாதாரக் கொள்கைகளுக்கான நிறுவனம் முன்னெடுத்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பான கருத்துகணிப்பில், 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் பெப்ரவரி மாதத்தில் பெரும் மாற்றங்கள் இல்லை என்றும், இதன்படி, 53 வீத அங்கீகாரத்துடன் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தொடர்ந்தும் முன்னிலை வகிக்கின்றாராமே?.

**வியுக்தியார்:** இந்தச் செய்தி வெளிவந்த அதே நாளில் தான், இதுவரை நமது நாட்டில் கருத்துக்கணிப்புக்களை நடாத்துவதற்கு ஆயிரம் கோடி ரூபா செலவிடப்பட்டிருக்கின்றது என்றும் ஒரு செய்தி வெளியாகியிருந்ததே கவனிக்கவில்லையா?. இந்த ஆயிரம் கோடியில் பெருந்தொகை பணத்தை ஜேவிபியும் செலவிட்டது என்று தானே அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஊழலுக்கு எதிராக போராடுவதாக காட்டிக்கொள்ளும் ஒரு கட்சிதான் கருத்துக்கணிப்பை நடாத்துவதற்கும் செலவுசெய்திருக்கின்றது என்பதையும் கவனித்துக்கொள்ளுங்கள்.

# பிலிப்பைன்ஸ் - சீனா கடலில் முறுகல்: தென் சீனக்கடலில் சீனாவின் செயற்கைத் தீவு!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



தென் சீனக் கடலின் பெரும்பகுதியை உரிமை கொண்டாடும் சீனாவுக்கும், பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, புருனே மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளுக்கும் கருத்து வேறுபாடு நீண்டகாலமாக நிலவுகிறது.

கடந்த சில ஆண்டுகளாகவே தென்சீனக் கடலில் தனது கடல் எல்லைக்கு அப்பாலும் வல்லாதிக்கத்தை விரிவு செய்யும் சீனாவால், அண்டை நாடுகள் அவதியடைவது சர்வதேச பிரச்சினையாக வளர்ந்திருக்கிறது.

**பிலிப்பைன்ஸ் சீனா முறுகல்:**

இதேவேளை தென் சீனக் கடலில் பிலிப்பைன்ஸூக்கும் சீனாவுக்கும் இடையே மோதல் வலுத்து வருகிறது. இந்த நிலையில், தென் சீனக் கடல் விவகாரத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு ஆதரவளிப்பதாக இந்தியா கூறியிருப்பது, சீனாவை திகைக்க வைத்துள்ளது.

இந்த வாரம் தென் சீனக் கடலில் பிலிப்பைன்ஸ் ராணுவக் கப்பல் மீது சீன கடலோரக் காவல்படை நீர் தாக்குதல் நடத்தி மூன்று வீரர்கள் காயமடைந்ததாக பிலிப்பைன்ஸ் அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பிலிப்பைன்ஸ் அரசு பெய்ஜிங்கில் உள்ள தனது தூதரக அதிகாரியை திரும்பப் பெற நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிலிப்பைன்ஸிலிருந்து 105 கடல் மைல் தொலைவில் தென்சீனக் கடலில் பயணித்த பிலிப்பைன்ஸ் இராணுவக் கப்பல் மீது இந்த நீர்த் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் சீனக்கடல் முறுகலால், சீனாவுக்கு எதிராக பிலிப்பைன்ஸ் இராஜதந்தர நடவடிக்கை எடுத்துள்ளது. கப்பல் பலத்த சேதம் அடைந்ததுடன், சீனக் கடலோரக் படையினரின் வன்முறைச் செயலை வன்மையாகக் கண்டிப்பதாக பிலிப்பைன்ஸ் வெளியுறவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

**இந்தியாவுக்கு சீனா எச்சரிக்கை:**

இந்த விஷயத்தில் இந்தியா தனது இறையாண்மை உரிமைகோரல்கள் மற்றும் கடல்சார் நலன்களை மதிக்க வேண்டும் என்றும் மூன்றாம் தரப்பினருக்கு தலையிட உரிமை இல்லை என்றும் இன்று சீனா தெரிவித்துள்ளது.

இதேவேளை தென் சீனக் கடல் விவகாரத்தில் தலையிட வேண்டாம் என இந்தியாவுக்கு சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென் சீனக்கடல் பகுதியில் சீனா ஆதிக்கம் செலுத்த முயற்சி செய்து வருகிறது. இதற்கு எதிராக மலேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் உள்ளிட்ட நாடுகள் உள்ளன.

கடந்த சில ஆண்டுகளாகவே தென்சீனக் கடலில் தனது கடல் எல்லைக்கு அப்பாலும் வல்லாதிக்கத்தை விரிவு செய்யும் சீனாவால், அண்டை நாடுகள் அவதியடைவது சர்வதேச பிரச்சினையாக வளர்ந்திருக்கிறது. இதேவேளை தென் சீனக் கடலில் பிலிப்பைன்ஸூக்கும் சீனாவுக்கும் இடையே மோதல் வலுத்து வருகிறது. இந்த நிலையில், தென் சீனக் கடல் விவகாரத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு ஆதரவளிப்பதாக இந்தியா கூறியிருப்பது, சீனாவை திகைக்க வைத்துள்ளது.

இவ்விவகாரத்தில் சீனா-அமெரிக்கா இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு இருந்து வருகிறது. சீனாவுக்கு எதிராக உள்ள நாடுகளுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது.

கடந்த வருடமும் தென் சீன கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ் எல்லை அருகே சீன கப்பல் ரோந்து பணியில் ஈடுபட்டது. அங்கு பிலிப்பைன்ஸ் கடற்படை கப்பலும் ரோந்து சென்ற போது இரு கப்பலும் மோதுவதுபோல் அருகருகே வந்தன.

**பிலிப்பைன்ஸ்க்கு அமெரிக்க உதவி:**

பிலிப்பைன்ஸ் கப்பல் பின்வாங்கியதால் மோதல் தவிர்க்கப்பட்டது. இது தென் சீன கடல் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியது. அப்போது சீனாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்தது. சர்ச்சைக்குரிய தென் சீன கடலில் ஆத்திரமூட்டும் மற்றும் பாதுகாப்பற்ற செயலை சீனா நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்தது.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர், சீனா அதன் ஆத்திரமூட்டும் மற்றும் பாதுகாப்பற்ற நடத்தையில் இருந்து விலகுமாறு கேட்டுக் கொண்டார். அத்துடன் பிலிப்பைன்ஸ் ஆயுதப்படைகள் மீதான எந்தவொரு தாக்குதலும் அமெரிக்காவை பதிலடிக்கு தூண்டும் என்றார். சீனா தனது கடல் எல்லையை தாண்டி வந்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்கா கடந்த வருடம் தெரிவித்தது.

**சீனாவின் செயற்கைத் தீவு :**

தென் சீனக்கடலின் மேற்பரப்பில் மீன் வளம் என்றால் கடல் ஆழத்தில் ஹைட்ரோகார்பன் என அபரிமிதமான இயற்கை கொடை சூழந்த கடல்வெளியைச் சீனா தனி பாணியில் வளைத்துப் போட்டது. தென்சீனக் கடலில் சிதறிக்கிடக்கும் மனிதர்கள் வாழத்தகுதியற்ற தீவுகளை முதலில் ஆக்கிரமித்தது.

பின்னர், அதை ஒட்டியே செயற்கைத் தீவு தொகுப்புகளை பிரம்மாண்டமாய் உருவாக்கியது. பின்னர் அந்தத் தீவுகளில் விமான தளம், படையணிகளைக் குவித்து அங்கிருந்தும் தனக்கான புதிய கடல் எல்லையை விரிவு செய்தது சீனா.

ஒரு தேசத்தின் நிலப்பரப்பிலிருந்தே குறிப்பிட்ட கடல் மைல்களில் அதன் கடல் எல்லைகள் தீர்மானிக்கப்படும். கடல் மத்தியில் நிலப்பரப்பை நீட்டிப்பதன் மூலம் கடல் எல்லையையும் முறைகேடாய் நீட்டித்திருக்கிறது சீனா.

இந்த அத்துமீறல் ஆக்கிரமிப்புகளால் அண்டை நாடுகளின் கடல் எல்லைகள் அடிவாங்க ஆரம்பித்தன. அதன் மீன்பிடிப்பு முதல் கடல் ஆராய்ச்சி, பாதுகாப்பு போன்றவையும் கேள்விக்குள்ளாகின. ●

# புரட்சிப்பா முதல்வன் புதுவைக்கு பாரிஸ் மாநகரில் பவழ விழா!

துரை

கவிஞர் புதுவை இரத்தினதுரை யின் பவள விழா பாரிஸ் நகரில் அண்மையில் எழுச்சி நிகழ்வாக கொண் டாடப்பட்டது. நடனம், பாடல், புத்தக வெளியீடு,விவரணப்படம் என நிழ்ச்சி கள் தொடர்ந்தன. தமிழ் செயற்பாட்டா ளர் அருள்மொழித்தேவன் நிகழ்வினை நெறிப்படுத்தினார். தாயகத்து மண்டபத் தில் மக்கள் கூடியது போன்ற உணர்வினை தந்த நிகழ்வில் தமிழ்ப் பற்றாளர், இளையோர்கள், போராளிகள், கலைஞர்கள், கலைப்போராளிகள், பெண்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். தமிழ் தேசிய கட்டமைப்புகள், கலைஞர்களின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற நிகழ்வில் விடுதலைப்போரில் களமாடிய போராளிகள், செயற்பாட்டாளர்களும் ஆளுமைகளும் கலந்து கொண்டு நினைவுகளை தந்தனர்.

தமிழர் ஒருங்கிணைப்பு செயற்பாட் டாளர் மேத்தா அனைவரையும் வரவேற்று அழகான உரைநிகழ்த்தினார்.

**கவியரசனுக்கு புகழாரம்**

புதுவை இரத்தினதுரை பற்றிய கவிதைகள், கருத்துகள், கட்டுரைகள் எழுதி கவிஞரின் வரலாற்று தடங்களை பதிவு செய்த உலகெங்கும் வாழும் தமிழ் உணர் வாளர், படைப்பாளிகளையும் ஈழநாதம், விடுதலைப்புலிகள் பத்திரிகை,வெளிச்சம் சஞ்சிகை, நிதர்சனம், புகைப்படபிரிவு, போராளிக்கலைஞர்கள், புதுவை இரத்தினதுரையின் மகன், உறவினர், தேச விடுதலை உணர்வாளர், தேசப்பற்றாளர், இளையோர் உட்பட்ட அனைவரையும் அன்பொழுக வரவேற்று உரையாற்றினார்.

**வரலாற்றுத்தடம்**

புதுவையின் வரலாற்று தடம் தொடர்பாக அவருடன் அருகில் இருந்து பணி யாற்றியவர்கள் தங்கள் உணர்வுகளை நனவிடை தோய்ந்தனர், நடனம் மற்றும் பாடல்களிலும் புதுவை கண்முன்னே கொண்டு வந்தனர்.

பாட்டுடை தலைவனின் நினைவு களை சுமந்த பாடல்கள் இறுவெட்டு போராளிக் கலைஞர் இரா.செங்கதிர் வெளியிட்டு வைத்தார். தமிழீழ போராட்ட நாட்களையும் உணர்வுகளையும் அவர் பகிர்ந்து கொண்டார். அறிவிப்பாளர் ஜஸ்ரின் தொகுத்து வழங்கினார். பாடல்களை எழுதியவர்கள், இசை அமைத்தோர், பாடியவர்கள், நடன விருந்து வழங்கியோர், அணிசேர் கலைஞர்கள் அனைவருக்கும் கவிஞரின் பெயரில் நினைவு விருது வழங்கப்பட்டது.

**புரட்சிப்பா முதல்வன்**

நிதர்சனம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட புதுவையின் வரலாறு விவரணச் சித்திரம் அகன்ற திரையில் காண்பிக்கப் பட்டது. நிறைந்த சபை மெய்மறந்து அவரது வரலாற்று பயணத்தை உள்வாங்கி கொண்டனர். கவிஞரின் பாடல் பிறந்த கதை மற்றும் இசைக்கோலங்




களின் உருவாக்க காட்சிகள் கவிஞர் உடனிருந்து வரிகளை சொல்ல இசை அமைப் பாளர் கண்ணன் இசைக் கோர்வைகளை உருவாக்க போராளிக்கலைஞர்கள் குரலில் பாடல்கள் பதிவாகும் காட்சிகளை துல்லியமாக பதிவு செய்து காண்பிக்கப் பட்டது. அத்துடன் புதுவையின் குரலில் கவிவரிகள் உச்சரிக்கப்பட்ட காட்சிக ளும் அவருடன் உடனிருப்பது போன்ற உணர்வை பார்வையாளருக்கு தந்தது.

திலிபனின் உண்ணாவிரத நிகழ்வில் “வந்து பாரடா வந்து பாரடா வாடமுன் பதில் சொல்லடா” என அனல் வாய்தி றந்து அக்கினி மழை பொழிந்த நாட்கள் மற்றும் கவியரங்க காட்சிகள் காண்பிக் கப்பட்டன. ஒவ்வொரு காட்சியும் நெஞ் சில் அழியாத்தடமாக பார்வையாளர்களின் உணர்வில் பதிந்தது. போர் மௌனிக் கப்பட்டு ஆண்டுகளானாலும் போர் இன்னும் ஓயவில்லை என்பதற்கு ஆவணச் சித்திரம் உதாரணமாகும். நிதர்சனம் நிறுவன வரலாற்று ஆவணத்திற்கு பாராட்டுகள். “புரட்சிபா முதல்வன்” என தலைப் பிடப்பட்ட இந்த விவரணச் சித்திரம் ஈழப்போராட்ட வரலாற்று பொக்கிசங்க ளில் ஒன்றாக பேணப்பட வேண்டும். ஈழ விடுதலையின் புரட்சிப்பா முதல்வனாய், கலைத்துவ இமயமாய் கொடி கட்டிய செம்மல் புதுவை இரத்தினதுரை என் னும் புலி வரிச்சொத்து. பாடல்களால் படையெடுத்த கவித்தளபதி புதுவை என்னும் ஆற்றல் மிகு ஏற்றம் என விவரண சித்திரத்தின் ஆரம்ப வரிகளாக ஒலித்தன.

காட்சிக்கு காட்சி இவ்வாறு அற்புத மான வரிகள் வந்து விவரணத்துக்கு பலம் சேர்த்தது.

தேசிய கொடி வணக்க பாடல், மாவீ ரர் துயிலும் இல்ல பாடல், மலர் வணக்க பாடல் என பல நூறு பாடல்களின் வரி களின் சொந்தக்காரன். இவருடன் பணி யாற்றிய கலைஞர்கள் தமது அனுப வத்தை இதில் பகிர்ந்து கொண்டனர்.

**காலத்தின் குறிகாட்டி**

“இந்த மண் எங்களின் சொந்த மண்” என்ற பாடலோடு அறிமுகமான கவிஞரோடு தொடர்ச்சியாக பல விடுதலை பாடல்கள், ஒலி நாடாக்கள், இறுவெட்டுகள் என்பவற்றை தயாரித்தும் பாடல் களை எழுதியும் பயணித்தார். இவரது பாடல்கள்,படைப்புகள் காலத்தின் குறி காட்டி நிலைத்து நிற்கும்” இவ்வாறு இசையமைப் பாளர் கண்ணன் புதுவை நினைவுகளை இரைமீட்டார்.

நெருப்பு நதியில் நீராடி வீரர்களின் நெஞ்சை வைரமாக்கிய போர்கவிதை புதுவை இரத்தினதுரை. தேச உணர்வின், மீட்பின், கலைபண்பாட்டின் அதிபதி யாய் ஆளுகை புரிந்த அற்புதம் அவர்.

சூழலியலாளர் பொ.ஐங்கரசன் தமது நினைவுப்பதி வில் “பாரதியை நான் கண் டதில்லை என் வாழ்நாளில் சந்தித்த பாரதி புதுவை அண்ணன் தான். கவிஞனுக்குரிய, கலைஞனுக்குரிய சுதந்திர மான உணர்வும், சுதந்திரமான பங்கேற்பும் அவரிடமிருந்தது”என்று கூறினார்.

பிறவிக்கவினாய் தன்னை பதிவு செய்து ஊர் மண்ணைத்தொடும் காதல் பாடல்கள்,பக்திப்பாடல்கள், சமூக சிந்தனை கவிதைகள், பெண் விடுதலைப்பாடல்கள்,சாதிக்கொடுமை பதிவுகள் என்று தன்னை ஒரு சுய சக்கரத்தில் சுழற்றி படைப்பாளனாக வலம்வந்த கலைத்துவம் இந்த வசீகரம். இலக்கிய சொற்பொ ழிவுகள், கம்பன் கழக மேடைகள், சீன கம்யூனிஸ்ட் கட்சி பிரசார மேடைகள் என இளமை பருவத்தில் தனக்கென திசையில் இயங்கிய அவரது பாதையும் இங்கு பதிவாகியுள்ளது.

**மக்கள் கவிஞர்**

“மார்க்கிஸ்ட் கம்யூனிச கவிஞராக தெரியும் அவரது தொடக்க கால அரசியல் அப்படியாகத்தான் இருந்தது. சாதா ரண மக்களுக்காக, அடிநிலை மக்களுக்காக பாடிய கவிஞர். அவரது கவிதையில் அழகியல் உணர்வு இருக்கிறது. அதனை எல்லோரும் ரசிக்கிறார்கள். சொல்ல டுக்கு அதைச்சொல்லும் முறை, அதை அடுக்கி கொண்டுபோகும் பாங்கு அவற் றுக்குள்ளே இருக்கின்ற ஓசை தன்மை அவரது கவிதைக்கு தனித்துவம் கொடுத்து கொண்டிருக்கிறது.” இவ்வாறு பேராசி ரியர் சண்முகதாஸ் கவிஞரின் கவித்தி றனை வியந்தார். விவ்வரண சித்திரத்தில் பலர் தோன்றினார்கள். புதுவையுடன் பழகிய நாட்களையும், பேசிய பொழு துகளையும் பாடல்களையும், அரசியலையும் உண்மை தன்மையுடன் எடுத்து இயம்பினர்.

ஈழத்துப்பாடகர்கள், தென்னிந்திய பாடகர்கள் பாடிய தாயக பாடல்கள், புலம்பெயர் உறவுகளின் பாடல்கள் யாவிலும் புதுவை எழுதிய போர் வரிகள் வாழ்கின்றன போன்ற தகவல்களுடன் விவரணச்சித்திரம் நகர்ந்து. உணர்வுடன் கலந்த இந்த விவரண பதிவு அவசியமானது என கருதுகிறோம்.

கவிஞரின் பவழவிழாவினை சிறப்பிக் கும் வகையில் எழுச்சிக்கீதம்களும், புரட்சிப்பாடங்களும் அடங்கிய இசை நிகழ்வு விழா இறுதியில் நடைபெற்றன. ●

# விபத்தில் உயிரிழந்த சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு முல்லைத்தீவில் அஞ்சலி

முல்லைத்தீவு, மார்ச் 31

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் அகிலேந்திரனுக்கு அஞ்சலி நிகழ்வு நேற்று முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் சிறீலங்கா ஜனரஜ சுகாதார சேவைப் சங்கத்தின் தலைவர் கஜேந்திரன் தலைமையில் குறித்த அஞ்சலி நிகழ்வு நேற்று மதியம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் தஞ்சயன் மற்றும்



வைத்தியர்கள், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், அரசாங்க தாதியர் உத்தியோகத்தர் சங்கம், பணியாளர்கள், ஊழியர்கள் என பலரும் விபத்தில் உயிரிழந்த வைத்தியர் கு.அகிலேந்திரனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் கு.அகிலேந்திரன் கடந்த 28 ஆம் திகதி ஓமந்தையில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கில் அதிகரிக்கும் வாகன விபத்து; விசேட வேலைத்திட்டம் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 31

வடமாகாணத்தில் போக்குவரத்து கட்டுப்பாட்டையும் வீதிப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த பொலிஸார் திட்டமிட்டுள்ளதாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் சி.ஏ. தனபால தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடமாகாணத்தில் அதிக வாகன விபத்துக்கள் மற்றும் அதிக வாகன நெரிசல் உள்ள பகுதிகள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன.

அடுத்த சில வாரங்களில் அந்த பகுதிகளில் வாகனங்களை நிறுத்துவதை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல், புதிய சாலை அடையாள பலகைகள் அமைத்தல், ஓட்டுநர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற பல வேலைத்திட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்களைக் குறைத்து, சீரான போக்குவரத்தையும், வீதி ஒழுங்கை பேணும் மாவட்டமாக வடமாகாணத்தை உருவாக்குவதே பொலிஸாரின் நோக்கமாகும்-என்றார். (அ)

# சமூக ஊடகங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 31

சமூக ஊடகங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதாக பொலிஸ் கணினி குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சமூக ஊடகங்கள் ஊடாக இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் 1500 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் கணினி குற்றப்பிரிவு கூறியுள்ளது.

இவற்றில் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களே அதிகளவில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேஸ்புக் ஊடாக இடம்பெறும் மோசடிகளும் அதிகரித்துள்ளதாக பொலிஸ் கணினி குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் 3 மாதங்களுடன் ஒப்பிடுகையில், இணையத்தளம் ஊடான மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகளில் சற்று அதிகரிப்பு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# காதுவலிக்கு தடுப்பூசி ஏற்றிய ஒருவர் உயிரிழந்தமை குறித்து விசாரணை

கொழும்பு, மார்ச் 31

காதுவலி நோய்க்கு சிகிச்சை பெற்று வந்த ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் குறித்த நோயாளிக்கு செலுத்தப்பட்ட தடுப்பூசி தொடர்பில் சுகாதார அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ராகம போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவருக்கு செலுத்தப்பட்ட தடுப்பூசியினால் ஏற்பட்ட உபாதை காரணமாக அண்மையில் குறித்து நோயாளி உயிரிழந்துள்ளார்.

கந்தகெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, குறித்த தடுப்பூசி ஹொரணை பகுதியில் அமைந்துள்ள மருத்துவ நிறுவனமொன்றில் தயாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரயிலில் மோதுண்டு இருவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 31

கண்டி ரயில் நிலையத்தில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த கடுகதி ரயிலில் மோதுண்டு இருவர் உயிரிழந்துள்ளனர்.

ராகம ரயில்கடவை மற்றும் ராகம துடுவேகெதர ஆகிய பகுதிகளுக்கிடையில் நேற்று இந்த சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் ராகம ரயில்கடவை அருகில் ரயிலில் மோதுண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் துடுவேகெதர பகுதியில் வைத்து ரயிலில் மோதி ஒருவர் தற்கொலை செய்துகொண்டதாகவும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரது சடலம் இதுவரை உறுதிப்படுத்தப்படாதுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# கோடரியால் தாக்கி பெண் கொலை

திருமலை, மார்ச் 31

திருகோணமலை - அக்போபுர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 85 ஆம் கட்டை பகுதியில் கோடரியால் தாக்கி பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

அயல் வீட்டில் வசித்துவந்த ஒருவருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறி கொலையில் முடிந்துள்ளது.

அயல் வீட்டில் வசித்த 54 வயதான நபர் மதுபோதையில் குறித்த பெண்ணின் கணவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நிலையில், அவரை கோடரியால் தாக்க முயன்ற போது மனைவி தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

44 வயதான பெண் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சடலம் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய இனங்கள் ஒருமித்து வழங்கவேண்டும். இவ்வாறு ஏனைய தேசிய இனங்கள் சார்பாக ஒரு மக்கள் ஆணையொன்றை உருவாக்கும் தளமாகவும் களமாகவும் எதிர்வரும் சனாதிபதி தேர்தலினை ஏனைய தேசிய இனங்கள் ஒருமித்து மாற்றவேண்டும்.

இவ்வாறு தேசிய இனப்பிரச்சனைக்கு முன்னுரிமையும் அரசியல் தீர்வும் என்ற ஆணைக்கு ஏனைய தேசிய இனங்களுடன் சிங்கள மக்களும் ஆதரவளிப்பதற்கான வாய்ப்புகள் விரிவாக்கப்படலாம். இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்கு வெறுமனே கொவிட் பெருந்தொற்றுக்கால சர்வதேச பொருளாதார நெருக்கடி என்பதற்கு அப்பால் கடந்த ஏழு தசாப்தங்களாக இனஒடுக்குமுறை சித்தாந்தத்தினால் நிகழ்ந்த அத்தனை பேரழிவுகளும் காரணம் என்பதையும் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படாத நிலையில் காலவரையறையற்று பொருளாதார சுமையும் பாதுகாப்புச் செலவும் ஊழல்களும் இலங்கையில் தொடரும் என்பதனையும் பெரும்பாலான பொதுநிலையான சிங்கள மக்களும் புரிந்து கொண்டுள்ளனர். எனவே அவர்களும் இத்தகைய மக்கள் ஆணைக்கு ஆதரவளிக்கும் வாய்ப்புகள் உண்டு. ●

# வெளிநாட்டுச்சதி குறித்து வெளியில் சொல்வதற்கு...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

'பேரவையின் தலைவர் என்ற வகையில் சபாநாயகருக்கு அடிப்படை வாக்கு **(Original vote)** இல்லை என்றபோதிலும், வாக்குகள் சமநிலையாகப் பிரிவடையும் பட்சத்தில் அவர் வாக்களிக்கமுடியும் என்றும் அரசியலமைப்பு கூறுகிறது.

'தேவையான ஐந்து வாக்குகளுக்கும் ஒன்று குறைவாக அரசியலமைப்பு பேரவையின் நான்கு உறுப்பினர்களே ஜனாதிபதியின் சிபாரிசை அங்கீகரித்து வாக்களித்த அதேவேளை, இரு உறுப்பினர்கள் (தானும் உட்பட) எதிராக வாக்களித்ததாக எதிர்க்கட்சி தலைவர் கூறினார். இரு உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அவர்கள் ஜனாதிபதியின் சிபாரிசை நிராகரித்ததாகவே கருதப்படவேண்டும்.

'ஆனால், சிபாரிசை ஏற்றுக்கொள்வதற்கு ஆதரவாக சபாநாயகர் தனது வாக்கை அளித்ததாக எதிர்க்கட்சி தலைவர் கூறினார். எந்த அந்தஸ்தில் சபாநாயகர் வாக்களித்தார் என்ற கேள்வி எழுகிறது. அவருக்கு அடிப்படை வாக்கு இல்லை. வாக்குகள் சமநிலையாகப் பிரிவடையும் பட்சத்தில் மாத்திரம் அவர் அளிப்பதற்கு ஒரு மேலதிக வாக்கு இருக்கிறது.

'அரசியலமைப்பு பேரவை நான்கு - நான்காக பிரிவடைந்த நிலையில் மேலதிக வாக்கை பயன்படுத்தியதாக சபாநாயகர் கூறினார். இரு உறுப்பினர்கள் மாத்திரம் வாக்களித்த போதிலும், கூட்டத்தில் இரு உறுப்பினர்கள் கலந்துகொள்ளாததை மேலும் இரு எதிர்ப்பு வாக்குகளாகக் கருதி வாக்குகள் சமநிலையாகப் பிரிந்ததாக நினைத்து ஜனாதிபதியின் சிபாரிசை அங்கீகரிப்பதற்கு தேவையான பெரும்பான்மை வாக்குகளை உறுதிசெய்வதற்கு தனக்குரிய மேலதிக வாக்கைப் பயன்டுத்த சபாநாயகர் தீர்மானித்தார் போன்று தோன்றுகிறது.

'வாக்களிப்பில் கலந்துகொள்ளாத ஒரு உறுப்பினர் எதிராக வாக்களித்ததாகக் கருதப்படவேண்டும் என்று அரசியலமைப்பு கூறவில்லை.

'வாக்களிப்பில் ஒரு உறுப்பினர் கலந்து கொள்ளவில்லை என்றால் அவர் தனது வாக்கை அளிக்கவில்லை என்பதே அர்த்தமாகும். எதிரானது என்றோ அல்லது ஆதரவானது என்றோ எண்ணப்படுவதற்கு அங்கு வாக்கு எதுவும் கிடையாது.

'எனக்கு தெரிந்தவரையில் இலங்கையிலோ அல்லது வேறு எங்குமோ பாராளுமன்ற நடைமுறையில் வாக்களிப்பில் கலந்துகொள்ளாத உறுப்பினர் ஒருவர் எதிராக வாக்களித்ததாக ஒருபோதும் கருதப்பட்டதில்லை. வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்றால் வாக்களிக்கவில்லை என்பதே அர்த்தம். அரசியலமைப்பு பேரவையில் சபாநாயகரின் செயற்பாடு அரசியலமைப்புக்கு முரணானது மாத்திரமல்ல, யதார்த்தத்துக்கும் புறம்பானது." ●

### தமிழரசுக்....

பொறுப்பில் இல்லாமல் கட்சிப் பணிகளில் அதிகளவு ஈடுபாட்டுடன் செயல்பட்டுள்ளேன். ஆகையால் தொடர்ந்தும் அவ்வாறே பயணிப்பேன். தமிழரசுக் கட்சி இப்போது உள்ளவாறு கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்கும் வரை தமிழரசுக் கட்சியில் எனது பயணம் தொடரும். தமிழரசுக் கட்சியில் இருந்து விலகுவதோ வேறு கட்சி தொடங்குவதோ எனது திட்டம் அல்ல - என்றார். (அ)

### தமிழக....

கலந்துரையாடுவதற்காக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய கடற்றொழில் நடவடிக்கை குறைவடைந்துள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறினார். (அ)

### துமிந்த....

மேலும், இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண பொருளாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு குறித்த பதவிக்கு மேல் மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ஹெக்டர் பத்மகே நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல், அமைச்சர் மஹிந்த அமரவீர சிரேஷ்ட உப தலைவர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டுள்ள நிலையில் முன்னாள் மேல் மாகாண ஆளுநர் சரத் ஏக்கநாயக்க அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆளுந்தரப்பில் இணைந்து அமைச்சர் பதவியேற்றவர்களின் பொறுப்புக்களையே சுதந்திரக் கட்சி பறித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

### ஒரே...

பிள்ளைகளை பாதுகாப்பதற்காக தமிழகத்தில் தஞ்சமடைந்ததாக குறித்த குடும்பத்தினர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். (அ)

### ஜூலை....

நாடு பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் பொருளாதார சீர்திருத்த செயற்பாடுகள் மிகவும் முக்கியமானதென ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

எனவே அந்த வேலைத்திட்டத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவை மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளை தனித்தனியாக சந்தித்தபோதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் ஜூலை இறுதி வரை அமுலில் உள்ளதால் அதற்கு முன்னர் தேர்தல் நடத்தப்படமாட்டாது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாணய நிதியச் செயற்பாட்டின் பின்னர் அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான நேரம் வருவதால் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்திற்கு ஜனாதிபதித் தேர்தல் தடையாக இருக்காது எனத் தெரிவித்த ஜனாதிபதி, அதற்கேற்ப தேர்தல் வரைபடத்தை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முதலில் தயாராகுமாறு அமைச்சரவை மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படாது என்பதை இது தெளிவாகக் காட்டுவதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற

# ரூ.15 கோடி பெறுமதியான கோதுமை மா பறிமுதல்!

கொழும்பு, மார்ச் 31

கனேவல்பொல பகுதியில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற சுமார் 15 கோடி ரூபா பெறுமதியான கோதுமை மா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது

கெக்கிராவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இதனை தெரிவித்துள்ளது.

இதன்படி 25 மற்றும் 50 கிலோ கிராம் நிறையுடைய 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதிகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

கெக்கிராவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது குறித்த தொகை கோதுமை மா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது

இதேவேளை, பறிமுதல் செய்யப்பட்ட கோதுமை மாவில் நச்சுப்பொருட்கள் உள்ளடக்கப்பட்டு காலாவதியடையும் திகதிகள் என்பன மாற்றியமைக்கப்பட்டு புதிதாக பொதி செய்து விற்பனைக்கு தயார் செய்யப்பட்டிருந்ததாக கெக்கிராவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# பௌத்த மதத்தை அழிப்பதற்கு சதி!

## அஸ்கிரிய பீட தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 31

இலங்கையில் பௌத்த மதத்தை அழிப்பதற்காக பல்வேறு சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அஸ்கிரிய பீடத்தின் தலைவர் வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரர் தெரிவித்தார்.

பொல்கொல்ல சரவண விகாரையில் சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது தொடர்பில் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்திய பின்னர் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சில பௌத்தர்கள் போதி விலங்குகளாகத் தோன்றுவது இந்த சதிகளுக்கான கூறுகளாக அமைகிறது.

மேலும் சில பிக்குகளின் செயற்பாடுகளினால் பௌத்தம் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அனைவரும் ஒன்றிணைந்து பௌத்தத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.

# மகாவலி ஆற்றில் குதித்த யுவதி மீட்பு!

கொழும்பு, மார்ச் 31

ஆற்றில் குதித்து தற்கொலைக்கு முயன்ற இளம் பெண்ணின் உயிரை இளைஞர்கள் குழு ஒன்று காப்பாற்றியுள்ளது.

நேற்று முன் தினம் இரவு 7.00 மணியளவில் மஹியங்கனை - கண்டி ஏ-26 வீதியில் மகாவலி ஆற்றின் வேரகங்தொட்ட பாலத்தில் இருந்து குறித்த யுவதி ஆற்றில் குதிக்க முயற்சித்துள்ளார்.

பாலத்தின் கொன்கிரீட் தடுப்பின் மேல் ஏறி ஆற்றில் குதிக்க தயாராக இருந்த குறித்த யுவதியை கண்ட அருகில் இருந்த இளைஞர்கள் குழு ஒன்று அவரை காப்பாற்ற ஓடி வந்தபோது குறித்த யுவதி ஆற்றில் குதித்துள்ளார்.

பின்னர், இளைஞர்கள் குழு அவரை ஆற்றில் இருந்து மீட்டு மஹியங்கனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

இதன் போது மஹியங்கனை பொலிஸாருக்கு சொந்தமான சுவசெரிய மற்றும் ஹசலக்க பொலிஸாருக்கு சொந்தமான சுவசெரிய வண்டிகளை கொண்டு வர முயற்சித்த போதும், குறித்த நோயாளர் காவு வண்டிகள் வருவதற்கு 45 நிமிடங்களுக்கு மேல் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வீதியில் பயணித்த முச்சக்கர வண்டியில் யுவதியை ஏற்றி சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

யுவதி பாலத்திற்கு வந்த சைக்கிள் மற்றும் அவரது கைப்பேசி பாலத்தின் மேல் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பொலிசார் அவற்றை கைப்பற்றி, தொலைபேசியில் உள்ள எண்களுக்கு அழைத்து, சம்பவம் தொடர்பில் அவரது பெற்றோருக்கு தெரிவித்தனர்.

குறித்த யுவதி சில காலமாக மன நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (அ)

### பொறுப்புக்....

வெளியிடப்பட்டிருக்கும் தரவு அறிக்கையில் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது-

இலங்கையின் கறைபடிந்த வலிந்து காணாமலாக்கப்படல் வரலாறு மனித உரிமைகள் வலுவாகப் புறந்தள்ளப்படுவதைக் காண்பிக்கின்றது. அத்தோடு சுமார் 60,000 - 100,000 வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவாகியிருக்கும் இலங்கை, உலகிலேயே அதிக எண்ணிக்கையான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் இடம்பெற்ற நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இலங்கை அரசாங்கமானது பல தசாப்தகாலமாக தீவிரவாதத்தைத் தோற்கடித்து, தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்ற போர்வையில் அரச பயங்கரவாதத்தை பிரயோகிப்பதற்கான ஆயுதமாக வலிந்து காணாமலாக்குவதைப் பயன்படுத்திவந்திருக்கின்றது.

1970 மற்றும் 1980 களில் ஜனதா விமுக்தி பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி) கிளர்ச்சி இடம்பெற்ற காலப்பகுதியில் ஆரம்பமான வலிந்து காணாமலாக்கப்படல்கள், தமிழ் இளைஞர்கள் அரச படையினரால் கடத்தப்படல் போன்ற சம்பவங்கள் மூலம் உள்நாட்டு ஆயுதப்போராட்டத்தின் போது மேலும் தீவிரமடைந்தது.

இருப்பினும் 2009 இல் போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதுடன் இவ் வலிந்து காணாமலாக்கப்படல்களும் இடைநிறுத்தப்பட்டன. ஆனால் போருக்குப் பின்னர் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், சிறுபான்மையின சமூகங்களை இலக்குவைத்து அரச அனுசரணையுடன்கூடிய 'வெள்ளை வான் கடத்தல்கள்' எனும் புதிய பாகம் ஆரம்பமானது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் மத்தியில் மிக ஆழமான துயரமும், தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற பதில் தெரியாத கேள்வியும், தொடர் விரக்தியும் நிலைகொண்டிருக்கின்றது. உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டுக்கான அவர்களது தொடர் போராட்டம் அரச ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகின்றது.

வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், அரசாங்கம் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் போன்ற கட்டமைப்புக்களை ஸ்தாபித்திருக்கின்றதே தவிர, அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான முயற்சிகள் மிகவும் மந்தகரமான நிலையிலேயே உள்ளன.

அதன்படி இலங்கையைப் பொறுத்தமட்டில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் என்பது உடனடியாக பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படவேண்டிய விடயமாக இருப்பதுடன், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தவேண்டியது அவசியமாகும் - என்றுள்ளது. (அ)

### ஜனாதிபதி....

நடத்தப்பட வேண்டும் என அவர் கூறினார்.

மேலும் ஜனாதிபதித் தேர்தலுக்கான எழுதுகருவிப் பொருட்களை கொள்வனவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் தேர்தல் தொடர்பில் அனைத்து உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

### ஈழத்தமிழர்....

உலகளாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக வழிமுறையான பொதுவாக்கெடுப்புமுறையை ஆதரிக்கவேண்டும்.

2. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரின் பரிந்துரைகளைப் பின்பற்றி, போரின் போது பொதுமக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு விரிவான சர்வதேச விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறலை ஆதரிக்கவும். அத்தகைய விசாரணையில் இனப்படுகொலை செய்யப்பட்டதா என்பது பற்றிய ஆராய்வதும் அடங்கும்.

3. சுயாதீனமான நீதித்துறை நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், சாத்தியமான குற்றச்சாட்டுகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு விசாரணைகளுக்காகப் பரிந்துரைக்கவும் அமெரிக்காவிற்கு ஐக்கிய நாடுகள் சபையில் - பொதுச் சபை , பாதுகாப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் சபை உட்பட- உள்ள தலைமைப் பாத்திரத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தவேண்டும் - என்றுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைத்தால் நாடெங்கும் போராட்டங்கள் வெடிக்கும்!



**கொழும்பு, மார்ச் 31**
**நாடெங்கும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மக்கள் போராட்டம் வெடிக்கும் என்பதால் ஜனாதிபதித் தேர்தலை ஒத்தி வைப்பதற்குரிய முயற்சிகள் இடம்பெறமாட்டாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலை ஒத்தி வைக்கவே முடியாது. அதனைச் செய்வதாயின் அரசமைப்பு மறுசீரமைப்பு அவசியம். அதற்கு உயர் நீதிமன்றத்தின் அனுமதி அவசியம்.

பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் தேவை. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இதற்கிடையில் அவ்வாறான முயற்சி எடுக்கப்பட்டால் மக்கள் வன்முறையற்ற அமைதிப் போராட்டத்தில் இறங்குவார்கள்.

நானும் முதலில் சட்டத்தை நாடுவேன். அதன் பின்னர் போராட்டம் செய்வேன். எனவே, அப்படியான முயற்சி இடம்பெறாது என்றே தோன்றுகின்றது.

அதேவேளை, நான் அரசியல் செய்வேன். ஆனால், தேர்தல் அரசியலில் ஈடுபடமாட்டேன். ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் அல்ல பிரதேச சபை தேர்தலில்கூட போட்டியிட மாட்டேன்-என்றார். (அ)

# பாராளுமன்றத் தேர்தலே முதலில் நடக்கவேண்டும்!

## நாமல் ராஜபக்ஷ கருத்து



கொழும்பு, மார்ச் 31

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட வேண்டும் எனில் முதலில் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் புதிய தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என எழுப்பட்ட கேள்விக்கு, “முதலில் பொதுத்தேர்தல் நடந்தால் இந்த கேள்வி எழாது.” ஏன நாமல் பதிலளித்தார்.

ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டால் ஏற்பீர்களா என்ற கேள்விக்கு,

“ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கட்சியின் நிறைவேற்குழு மற்றும் அரசியல் குழுவே முடிவை எடுக்க வேண்டும். கட்சி எடுக்கும் எந்தவொரு முடிவையும் ஏற்க தயார்.” - என்று பதிலளித்தார் நாமல். (அ)

# ஊடக தூது மடலின் இரண்டாவது வெளியீட்டு விழா இன்று யாழில்!

## தில்லைநாதனுக்கு விருது

யாழ்ப்பாணம், மார்ச் 31

ஊடகத் தூது மடல் இரண்டாவது வெளியீட்டு விழாவும், “ஊடகவியல் கற்போம் - தமிழ் கத்தோலிக்கச் செய்தி” லங்கா இணைய யூரியூப் தள திறப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். கொழும்புத்துறை பீச் றோட்டில் அமைந்துள்ள பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் காலை 10 மணிக்கு ஊடகத் தூது மடலின் பிரதம ஆசிரியர் கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் தலைமையில் நிகழ்வு ஆரம்பமாகின்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மூத்த ஊடகவியலாளரும் கொழும்பு தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான வீரகத்தி தனபாலசிங்கம் கலந்துகொள்கின்றார். சிறப்பு விருந்தினர்களாக மூத்த ஊடகவியலாளரும் தினக்குரல் வார மலரின் முன்னாள் ஆசிரியருமான பாரதி இராஜநாயகம், ஓய்வுநிலை அதிபர் அ.சார்ள்ஸ் அரியகுமார், மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

நிகழ்வில் ஊடகத் தூது விருது வழங்கலும் இடம்பெறும். ஊடகத்துறையில் ஐம்பது ஆண்டுகளுக்கு அதிகமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் வடமராட்சி மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதனுக்கு ஊடகத் தூது மடலின் 2024 ஆம் ஆண்டுக்கான ஊடகத் தூது விருது வழங்கப்படுகின்றது. (அ)

# முள்ளியவளை வீட்டு காணிக்குளிருந்து பைப் லைன் மூலம் கசிப்பு விநியோகம்!

## பொலிஸாரால் ஒருவர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 31

முள்ளியவளையில் வீட்டு காணி ஒன்றில் பைப் லைன் மூலமாக கசிப்பு உற்பத்தி செய்து விநியோகத்தில் ஈடுபட்ட குடும்பஸ்தர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றது.

முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாமூலை நீலகண்டபுரம் கிராமத்தில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை இடம்பெற்று வருவதாக முள்ளி யவளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்ப டையில் குறித்த பகுதியில் தேடுதல் நடத்திய பொலிஸார்,

வீட்டின் உரிமையாளர் ஒருவர் அவரது காணிக்குள் பைப்லைன் ஊடாக கசிப்பு காச்சி விற்பனையில் ஈடுபட்டு வந்தமை தெரியவந்துள்ளது.

குறித்த வீட்டுக்கு சென்ற பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்தனர். (அ)

# போதைப்பொருள் சுற்றிவளைப்பில் 13 பெண்கள் உட்பட 798 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 31

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்பில் 13 பெண்கள் உட்பட 798 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுள், 43 சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதோடு 14 சந்தேக நபர்களின் சொத்துக்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவர்களில் போதைப்பொருளுக்கு அடிமையான 11 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட 510 சோதனை நடவடிக்கைகளில் 6 பெண்கள் உட்பட 600 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது, 182 கிராம் ஹெரோயின், 148 கிராம் ஐஸ் , 307 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், தென் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட 66 சோதனை நடவடிக்கைகளில் பெண் உட்பட 65 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது, 30 கிராம் ஹெரோயின் மற்றும் 302 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# இனவாத அரசியல் வேண்டாம்!

## கஜேந்திரன் எம்.பி கோரிக்கை



அம்பாறை, மார்ச் 31

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் இனங்களுக்கிடையே குரோதங்களை உருவாக்கி தங்களது அரசியலை நடத்தி செல்ல முற்படக் கூடாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பில் மக்கள் போராட்டம் 5 நாட்களாக இடம்பெற்று வந்த நிலையில் அதில் கலந்து கொண்டு ஊடகங்களிடம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் இனங்களுக்கிடையே குரோதங்களை உருவாக்கி தங்களது அரசியலை நடத்தி செல்ல முற்படக் கூடாது. தமிழ் முஸ்லீம் மக்கள் இந்த பிரதேசத்தில் ஒற்றுமையாக வாழ விரும்புகின்றார்கள். இந்த கல்முனை பிரதேசத்தில் உள்ள முஸ்லீம் மக்களுக்கு நான் ஒரு அன்பான அழைப்பு விடுக்கின்றேன். இங்குள்ள தமிழ் முஸ்லீம் மக்கள் ஒரு தாயின் பிள்ளைகளாக வாழ விரும்புகின்றார்கள். எனவே முஸ்லீம் மக்களின் ஆதரவினை நாம் கோரி நிற்கின்றோம். கல்முனை தெற்கு பிரதேச செயலகம் வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான அதிகாரம் செலுத்துவதை தடுத்து நிறுத்தவற்கு உதவ வேண்டும். உங்களின் ஆதரவுடன் தான் இங்கு இன நல்லுறவினை நாம் ஏற்படுத்த முடியும். ஒரு சில அரசியல் பிரமுகர்கள் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை ஒரு பிரதேச செயலகமாக செயற்படுத்த முடியாதவாறு தங்களது செல்வாக்கினை பயன்படுத்தி கொண்டிருப்பதானது மிகத் துரதிஸ்ட வசமானது. பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸிடம் இதை ஒரு பிரதேச செயலகமாக 1993 ஆண்டு போன்று செயற்பட விடுவதுடன் அதற்கு இடையூறாக இருக்கக் கூடாது, தமிழ் முஸ்லீம் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு நீங்கள் வழி ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்-என்றார். (அ)

# போதைப்பொருள் ஒழிப்பு ஆலோசகர்களாக பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பயிற்சி!

கொழும்பு, மார்ச் 31

பல்கலைக்கழக மாணவர்களை போதைப்பொருள் ஒழிப்பு ஆலோசகர்களாக பயிற்றுவிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

யுக்திய சுற்றிவளைப்புத் திட்டத்துக்கு அமைவாக, இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உதவி பணிப்பாளர் பிரதீப் கொஹொலன்கே தெரிவித்தார்.

இதற்கமைவாக, ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் இருந்து 200 மாணவர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளதாகவும் இந்த திட்டத்தை பாடசாலை மட்டத்திலும் முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, யுக்திய சுற்றிவளைப்பிற்கு இணையான போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை தொடர்பில் நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் எதிர்வரும் 02 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

போதைப்பொருள் தடுப்பு பயிற்சியை பெற்றுக்கொள்ளும் பல்கலைக்கழக மாணவர்களை பாடசாலை மட்ட ஆலோசகர்களாக நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் 400 மாணவர்களுக்கு இதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உதவி பணிப்பாளர் பிரதீப் கொஹொலன்கே தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.